# தமிழ் நாட்டு விழாக்கள்

UNIVERSITY LIBRARY
3 1 MAY 1957
MADRAS

**அ. மு. பரமசிவானந்தம்,** M. A., M. Litt.
துணைத் தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
**சென்னை-30**

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION
16 DEC 19
MADURAI

**தமிழ்க்கலைப் பதிப்பகம்**
**சென்னை–30**

*Univ. Grants Commission.*

முதற்பதிப்பு: ஏப்ரில் 1956

விலை ரூ. 1—4—0

541
Y11:36
J6

உரிமைப் பதிப்பு

# முன்னுரை

உலகெங்கணும் வாழ்கின்ற மக்கள் தாம் என்றென்றும் இன்பத்தில் திளைக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். அவ்வாறு எண்ணுதல் இயல்புங்கூட. ஆனால், அனைவரும் அவ்வாறு எண்ணிய இன்பத்தை எண்ணியாங்குப் பெறுதல் இயலாது. அதையும் நாம் காண்கின்றோம். என்றாலும், வாழ்வில் சில நாட்களையாவது அனைவருக்கும் இன்ப நாளாகக் காண விரும்புகின்றனர் நல்லவர்கள். 'எத்துணைத் துன்பத்தில் பட்டுழன்றாலும், வாழ்வில் சில நாளாவது அனைவரும் ஒருசேர இன்பத்தில் திளைக்கவேண்டாவா?' என்று எண்ணிற்று அவர்தம் உள்ளம். அந்த உள்ளத்தின் உணர்வே உலகில் விழாக்கள் தோன்ற வழி காட்டியாய் அமைந்தது.

விழாக்கள் நாடுதோறும் ஒவ்வொரு வகையில் நடைபெறுகின்றன. மேலை நாடுகளிலும் ஆண்டுதோறும் பல விழாக்கள் நடைபெறுவதைக் காண்கின்றோம். சமயச் சார்பு பற்றி நடைபெறும் விழாக்கள் சில. சமூகச் சார்பு பற்றி நடைபெறும் விழாக்கள் சில. பருவமும் நாளும் பற்றிக் கொண்டாடப்பெறும் நாட்கள், சில. பாரெலாம் சிறக்கவேண்டி ஆற்றும் வழிபாட்டு விழாக்களும் சில. இன்று உலகமெல்லாம் ஒருசேரக் கொண்டாடும் ஐக்கிய நாடுகள் தினவிழா முதலியன, உலகம் ஒற்றுமையாகக் கலந்து கொண்டாடப்பெறுவன. நம் பாரத நாட்டில் கொண்டாடப்பெறும் ஆகஸ்டு பதினைந்தும், ஜனவரி இருபத்தாறும் — விடுதலை விழாவும், குடியரசு விழாவும்—நம் நாட்டு மக்கள் அல்லல் அகன்று அடிமை வாழ்வு நீங்கி மகிழ்ச்சியில் சிறந்த நாட்களை நினைவூட்டும் விழாக்களாகும். டிசம்பர் 25-ஆம் நாள் கிறிஸ்தவர்தம் சமயத் தலைவரைப் பற்றிய நாள். அதைப் போன்று மகமதியமும், பௌத்தமும், சமணமும் தத்தம் சமய விழாக்களைக் கொண்டாடுகின்றன. நம் நாட்டில் நெடுங் காலமாக நிலைபெற்று வரும் சைவமும் வைணமும் அவை போன்ற விழாக்களைக் கொண்டாடி வந்துள்ளன.

தமிழ் நாட்டில் நாம் மேலே கண்ட அத்தனை வகையான விழாக்களும் நடைபெற்றன என்று அறிகின்றோம். சமயச் சார்பான விழாக்களும் உள; சமுதாயச் சார்பான

விழாக்களும் உள. பருவம் போற்றும் விழாக்களும் உள; சாதாரண வேடிக்கை விளையாட்டுக்கள் கலந்த விழாக்களும் உள. அவற்றையெல்லாம் தொகுத்துக்கூறின் அது ஒரு பெருநூலாக முடியும். வாய்ப்பு நேருமேல் பின்னால் அனைத்தையும் சேர்த்துப் பெருநூலாக வெளியிடலாம் என்ற நோக்கோடு, இன்று விழாக்கள் பற்றிய இச்சிறு நூலைத் தமிழ் மக்கள் முன் வைக்கின்றேன்.

விழாக்களின் அடிப்படைக் கொள்கை என்ன என்பதை ஒவ்வொரு விழாவைப் பற்றிய விளக்கத்திலும் குறிப்பிட்டுள்ளேன். விழா, தனி மனிதன் உடைமையன்று. பிறந்த நாள் விழாவும், நீராட்டு விழாவாகிய மண்ணு மங்கலம் போன்ற விழாக்களும், இன்னும் சிலவும் அரசருக்கே உரிய விழாக்களாகத் தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் காட்டினும், அவையெல்லாம் அரசன் ஒருவனாலேயே கொண்டாடப்பெறுவன அல்ல. தனி அரசன் எவ்வாறு தனக்குத் தானே விழாவினைக் கொண்டாடிக் கொள்ள முடியும்? மற்றவர் அனைவரும் சேர்ந்து 'இன்று மன்னன் பிறந்தனன். மாநிலத்தீர், வாருங்கள்,' என்று உலகத்தாரை அழைத்துச் சிறப்புச் செய்தால்தானே விழாவே சிறப்புறும்? எனவே, தனி மனிதனுக்குச் செய்யும் விழாவுங்கூட, மற்றவர் தொடர்புகளிடையே நடைபெற வேண்டியுள்ளது.

இவ்வாறான தனி மனிதர் விழாவினை விடுத்து, பொது விழாக்களை நோக்கின், அவை மக்கள் வாழ்வைத் திருத்துவனவாக அமைவதையே நாம் காண்கின்றோம். ஏதோ உண்டு, உடுத்து, உல்லாசமாகத் தனி மனிதன் வாழ்வதை எந்த விழாவும் குறிக்கவில்லை. தமிழ் நாட்டில் மட்டுமன்றி, இன்று உலக அரங்கில் நடைபெறும் அத்தனை விழாக்களும் கூடி வாழும் மனித சமுதாயத்தையேதான் அணைத்துச் செல்லுகின்றன. இத்தமிழ் நாட்டு விழாக்களிலும் அத்தகைய பண்பாடுகள் நிறைந்திருப்பதை இந் நூலில் பல்வேறு இடங்களில் விளக்கிக் காட்டியுள்ளேன்.

விழா என்பது நாட்டை வாழ்விக்க வரும் ஒரு நல்ல நாளேயாகும். நாட்டில் எத்துணை வேறுபாடுகள் இருந்தாலும் அவை விழா நாட்களில் இல்லையாக நீங்கப் பெறவேண்டும். மகப்பெறு விழாவிலே மன்னவர்கள் 'சிறைவிடுமின்; சிறைக்களமும் சீர்திருத்துமின், ஏழாண்டு தேயத்தீட்டும் இறைவிடுமின்,' என்று ஆணையிட்டு, தம்

வீட்டு விழாவை நாட்டு விழாவாக்கிய நாகரிகத்தை வரலாற்றிலே காண்கின்றோமே! தமிழ் நாட்டு விழாக்கள் அந்த வகையில் அமைந்தனவேயாகும். நாட்டில் எந்த வேறுபாடும் அன்று இருக்கக்கூடாது. சாதியாலும், சமயத்தாலும், நிதியாலும், நிறத்தாலும், வேறு எந்த வகையாலும் மக்கள் வேறுபாட்டினைக் காட்டலாகாது. அன்று பசி என்று ஒருவன் நாட்டில் பரிதவிக்கக்கூடாது. நோயாளியென்று, அன்று யாரும் மருத்துவம் நாடிச் செல்லக்கூடாது. இதுவே, விழாவின் அடிப்படை.

விழாவன்றுமட்டும் அவ்வாறு அமைந்து, மறு நாள் நாட்டு நிலை மாறினும் பயன் இல்லை. எனவே, அவ்வாறு நாடு திருந்துவதற்கேற்ற சூழ்நிலை உண்டாகவேண்டும். அதற்கேற்ற வகையில் நாட்டில் வற்றாத வளம் பெருக வேண்டும். அவ்வளம் பெருக வான் சுரக்க வேண்டும். அப்பொழுதுதான் நாடு விழாவாற்றின பலனைப் பெற்றதாகும். இக்கருத்தையெல்லாம் உட்கொண்டுதான் காவிரிப்பூம்பட்டினத்தில் விழாவினை மக்கள் அறிய முரசறைந்த வள்ளுவ முதுமகன்,

**‘பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி’**

மேல் விழாவினை அறிவுறுத்தினன் என்று அறிகின்றோம். இவ்வடிகளையும் கருத்தினையும் இந்நூலில் ஆங்காங்குக் கட்டுரைதோறும் காட்டியுள்ளேன். ஆம்! அந்த விழைவு நிறைவேறினால்தான் விழாவின் அடிப்படையும் நிறைவேறும்.

தமிழ் நாட்டு விழாக்களில் பல, உழவர் கொண்டாடுவனவே. உழவர்கள்தாமே நாட்டில் பெரும்பாலாராக உள்ளனர்? இவை போன்ற உழவர் விழாக்கள் வடநாட்டிலும் கொண்டாடப்பெறுகின்றன. நிலம் செம்மைப்படுத்தும்போதும், உழவின் போதும், அறுவடையின் போதும், பூச்சிகளைப் போக்கும்போதும், வழிபாட்டைப் பெருக்க விரும்பும்போதும் அங்கு வழிபாடும் விழாவும் ஆற்றுவர் என அறிகின்றோம். மற்றும் நம்பிக்கையின் அடிப்படையிலே இங்கு மட்டுமன்றி, அங்கும் பல விழாக்கள் நடைபெறுகின்றன. ஊரில் கெட்ட காற்றுப் புக, அதை நீக்க மக்கள் ஒன்று சேர்ந்து, கையில் கொம்பு கொண்டு, தெருக்களில் பாடல்களோடு சுற்றி வருவார்

களாம். தீபாவளி விளக்கு வரிசையே கெட்டதை நீக்கும் நல் ஒளியாம். காந்தேச (Khandesh) நாட்டிலே நம் நாட்டு விழாக்கள் போன்று பல விழாக்கள் உண்டாம். எனவே, நாட்டிலும் உலகிலும் நடக்கும் விழாக்களில் ஒரு சில தமிழ் நாட்டிலும் வழக்கத்தில் உள்ளன.

தமிழ் நாட்டில் எத்தனையோ விழாக்கள் நடைபெறு கின்றன. திறப்பு விழா, கால்கோள் விழா என்று நாள் தோறும் பத்திரிகையில் காண்கின்றோம். கம்பன் விழா, வள்ளுவன் விழா என்று புலவர் விழாக்களையும் அறிவோம். இன்னும் எத்தனையோ வகைகளில் நாட்டில் விழாக்கள் நடைபெறுகின்றன. பெண்கள் விளையாடு கின்ற விளையாட்டுக்களையெல்லாம் விழாவாக்கி மணி வாசகர் தம் திருவாசகத்தில் பலப்பல பாடல்கள் பாடு கின்றார். அவைகளெல்லாம் தமிழ் நாட்டு விழாக்கள் தாம். அவ்விழாக்களுள்ளே மக்கள் பலராலும் போற்றப் படும்—நன்கு ஆற்றப்பெறும்—ஒரு சில விழாக்களைப் பற்றியே இந்நூலில் குறித்துள்ளேன். இவற்றுள் சில முன்னமே சிற்சில இதழ்களில் வெளி வந்துள்ளன. ஒரு சில புதியன.

தமிழ் நாட்டுப் பழைமையைப் புத்துலகுக்குக் கொண்டுவந்து காட்ட வேண்டுமெனப் பலர் விழைகின் றனர். அவ்விழைவில் பழைமை, புதுமை நலம் பெற்றுப் பொலிய வேண்டுவது ஒன்றாகும். எனவே, அத்துறையில் நம் நாட்டுப் பழைய விழாக்கள் சிலவற்றை எடுத்து, அவை இன்றும் என்றும் கொண்டாடத் தக்கன என்பதை இந்நூலில் ஓரளவு காட்டியுள்ளேன்.

இந்நூல் வெளி வரும்போது ஒப்பு நோக்கி உதவிய அன்பர் **திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை** அவர் களுக்குஎன் நன்றி உரியதாகுக.

சென்னை-30,<br>13–4–'56.

**அ. மு. பரமசிவானந்தம்**

# பொருளடக்கம்


| பொருள் | | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| 1. தென்றல் தவழும் சித்திரை விழா | | | 9 |
| 2. வேனில் விழா | .... | .... | 25 |
| 3. ஓண விழா | ... | ... | 35 |
| 4. கலை மகள் விழா | .... | ... | 44 |
| 5. கார்த்திகை விளக்கீடு... | | .... | 56 |
| 6. மார்கழி நோன்பு | .... | ... | 64 |
| 7. பொங்கல் விழா | ... | .... | 74 |
| 8. உத்தரத் திருவிழா | .... | .... | 82 |

# தென்றல் தவழும் சித்திரை விழா ★

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

தமிழர்தம் ஆண்டுப்பிறப்பும் சித்திரை மாதப் பிறப்பும் இரண்டும் ஒன்றேதான். மாதத்தில் சித்திரை சிறந்ததாகவும் முதலாவதாகவும் அமைந்துள்ளது. சித்திரையை ஒரு சிறந்த மாதமெனத் தமிழ்நாட்டவரும் வடநாட்டவரும் போற்றுகின்றனர். இம்மாதத்தில் மல்லிகையும் முல்லையும் மலர்ந்து மணம் வீசி மாநிலத்தை மகிழ்விக்கின்றனர். தேமாவும் தீம்பலாவும் அரும்பழங்களைப் பாருக்கு நல்கி மக்கள் நாவினுக்கு நல்ல சுவையினைக் கொடுப்பது மாரவேள் விழாக்காலமென இந்தச் சித்திரையும் இதற்கு முன் உள்ள பங்குனியும் இலக்கியங்களில் போற்றப்படுகின்றன.

வானவீதியில் பட்டொளி வீசிச்செல்லும் திங்களஞ்செல்வன் தன் முழு அழகையும் காட்டும் ஒரு திங்கள் சித்திரையேயாகும்.

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்'

கலந்த இனிய ஒரு மாதமாகச் சித்திரையைக் காண்கின்ற புலவர் பல்லோர். இத்தகைய எழில் பூத்துக் குலுங்கும் இந்த மாதத்தில் தமிழ் மக்கள் சிறந்த விழாக் கொண்டாடி மகிழ்ந்தார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

நிறைமதி நாளெல்லாம் தமிழர்க்குத் தலையாய நாட்கள். தமிழர் மட்டுமென்ன! உலகில் எவ்விடத்து வாழ்வோரும் இந்நிறைமதி நாளினை இன்பநாளாகத் தான் கொள்வார்கள். இந்நிறைமதி நாள் திங்கள் தோறும் வருகின்றது. ஒவ்வொரு நிறைமதி நாளும் ஒவ்வொருவகையில் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. கார்த்திகையில் விளக்கீடாகவும், மார்கழியில் ஆதிரையாகவும், தையில் பூசமாகவும், மாசியில் மகமாகவும், பங்குனியில் உத்தரமாகவும் காட்சி தரும் விழா, சித்திரைத் திங்களில் சித்திரை மீன் சேர்ந்த நாளாகக் காட்சி நல்குகின்றது. இந்த மாதங்களின் பெயர்களாலேயே அந்த விழாச்சிறப்புக்கள் விளக்கமுறுகின்றன. இருபத்தேழு நட்சத்திரங்களிலும், ஒவ்வொரு திங்களில் சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தில் நிறைமதியாகக் காட்சி தருகின்றான். அந்த நட்சத்திரங்களின் பெயரை ஒட்டியேதான் மாதங்களின் பெயர்கள் அமைவதைக் காண்கிறோம். சந்திரன் தன் நிறைநாளைச் சித்திரை நட்சத்திரத்தோடு சார்த்தி நிற்கும் அந்த மாதமே சித்திரை மாதமாகும். சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தோடு சந்திரன்கூடும் நாளே ‘சித்திரா பௌர்ணமி’ என்னும் நல்ல நாளாகும். அந்நாளில் பொங்கி வழியும் பால் நிலவைப்போல மக்கள் உள்ளமும் மகிழ்ச்சியில் பொங்கித் திளைக்கும் என்பது உறுதி.

மிகவும் பழங்காலந்தொட்டு, இந்த நிறைமதிப் பெருவிழா தமிழ்நாட்டில் நடைபெற்று வருகின்றது. இவ்விழாவை மக்கள் வீட்டுக்குள்ளேயே இருந்து கொண்டாடமாட்டார்கள். கார்த்திகையில் வீட்டுக் குள்ளேயே இருந்து விளக்கேற்றி வழிபட்டவர்கள், மார்கழியிலும் தையிலும் தண்ணிய தடம் படிந்து பொய்கையாடி மகிழ்ந்தவர்கள், மாசியிலும் பங்குனி யிலும் வசந்தத்தையும் இளவேனிலையும் எதிர் நோக்கியிருந்தவர்கள், அப்பங்குனியில் மலரும் வசந்தம், வளமாரப் பூத்துக்குலுங்கும் சித்திரையில் மகிழாதிருப்பார்களோ? அவர்தம் மகிழ்ச்சி வீட் டோடு நில்லாது பரந்த நிலப்பரப்பினை நாடிச்செல்லு கின்றது. பரந்த மணல் வெளியும், சோலையும், கடற் கரையும், பிற ஆற்றுப் படுகைகளும் அவர்தம் விழா வுக்கு ஏற்ற இடங்களாய் அமைகின்றன. காதலரும் பிறரும் களித்து மகிழும் இந்தச் சித்திரை நிறை நாள் விழாவைப் பழங்கால இலக்கியங்கள் பாராட் டிப்பேசுகின்றன. சங்ககாலத்தை ஒட்டி எழுந்த இரு பெருங்காவியங்களாகிய சிலப்பதிகாரமும் மணி மேகலையும் இவ்விழாவைப் போற்றுகின்றன.

இரு பெருங்காவியங்களும் இவ்விழாவை இந்திர விழா என்ற பெயரால் போற்றுகின்றன. இரண்டிலும் இவ்விழாவைப்பற்றிய இரு காதைகள் உள்ளன. இவற்றைப் பயில்வார்க்கு இவ்விழாவைப் பற்றிய நல்ல விளக்கங்கள் புலனாகும். கோவலன் நகராகிய காவிரிப்பூம்பட்டினம் கடற்கரையில் அமைந்திருந்தமையின், அவர்தம் விழா அழகிய காவிரி கடலொடு கலக்கும் அப்பரந்தவெளியிடத்தே நடைபெற்றது என அறிகின்றோம்.

இன்றைக்கும் இவ்விழா ஊர்தோறும் கொண்டாடப் பெறுகின்றது. அவ்வவ்வூரில் உள்ள இறைவனைக் கோயிலில் வழிபடாது, ஆற்றங்கரையின் பரந்தமணல் வெளிக்கும், குளக்கரையில் உள்ள விரிந்த சோலைக்கும் எடுத்துச்சென்று, அங்கங்கே வழிபடுவதைக் காண்கிறோம். அதுகாலை ஊரிலுள்ள ஆடவரும் பெண்டிரும் அணியணியாக விழாக் கோள் தொடங்க ஆற்றையும் சோலையையும் நோக்கிச் செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அவ்வாறு அவர்கள் சென்று தாம் தாம் கொண்டுவந்த பண்டம் பலகாரங்களை மற்றவருக்கும் பங்கிட்டுக்கொடுத்து, தாமும் மகிழ்வோடு உண்பார்கள்; இறைவனது திருவோலக்கம் காண்பார்கள். வற்றி வரண்ட ஆற்று மணலைத்தோண்டி நீர் உண்டாக 'ஊறல்' விழாச்செய்வர். குளங்களில் தெப்பங்கள் கட்டி இறைவனைத் தெப்பத்தில் அமர்த்திச் சிந்தை மகிழ்வர். தென்றல் அவர்மேல் தவழ்ந்து இன்பூட்டும். அவர் இதயம் களிப்பர். ஆம்! இவ்வாறு ஊர்தோறும் இன்றும காணப் பெறும் இந்தச் சித்திரை விழா இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இத்தமிழ்நாட்டில் எவ்வாறு கொண்டாடப்பெற்றது என்பதைக் காட்டுகின்றன சிலம்பும் மேகலையும்,

காவிரிப்பூம்பட்டினம் கடற்கரையில் உள்ள ஊர் அல்லவா? எனவே இவ்விழா, கடலோடு காவிரி கலக்கும் அந்த அழகிய இடத்தில் கொண்டாடப் பெற்றது. இவ்விழாவைக் கொண்டாடுதற்கு ஒரு கதை உள்ளதென்பது மணிமேகலையால் தெரிகின்றது. சோழ நாட்டை ஆண்ட மன்னருள் தலை சிறந்த ஒருவன், 'தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன்' என்பான். அவன் அகத்திய

முனிவரின் ஆணையின்படி இந்திரனை வேண்டினான். இந்திரன் இருபத்தெட்டு நாட்கள் இவ்விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்பது அவன் விருப்பம். இந்திரனும் அவ்விருப்பத்துக்கு இணங்கினான் போலும்! அவனை முன்னிறுத்திச் செய்த விழாவாதலின், இவ்விழா 'இந்திரவிழா' என்றே வழங்கப்பெற்றது.

இந்த விழாவினைத் தொடர்ந்து செய்யாவிடில் அந்தப் பெருநகருக்கே கேடு வரும்போலும்! சாத்தனார் இவ்விழாச் செய்யாவழி உண்டாகும் தீங்கினையும் காட்டுகின்றார். பின்னர்ப் புகார் அழிவுற்றதற்கே அந்நாட்டு மன்னன் இவ்விழா நடத்தாமையைத்தான் சாத்தனார் பின்னரும் காரணம் காட்டிப் பேசுகின்றார்.

"வானவன் விழாக்கோள் மாநகர் ஒழிந்தது;
மணிமேகலா தெய்வம் மற்றது பொறாஅள்,
'அணிநகர் தன்னை அலைகடல் கொள்க'என,
இட்டனள் சாபம்; பட்டது இதுவால்."

(மணிமேகலை, 25:197-200)

என்ற அடிகள் மாநகர் இந்திரவிழாவை மறந்ததால் கடலுள் ஆழ்ந்தமையைக் காட்டுகின்றன வல்லவா? எனவே, இச்சித்திரைப் பெருவிழா இடைவிடாது செய்யப்பட வேண்டிய ஒன்று என்பது தெரியக் கிடக்கின்றது.

விழாவை இந்திரனோடு தொடர்பு படுத்தி, விழா இன்றேல் நகர் அழிவுறும் என்று கூறியது உண்மையோ அன்றோ என்று ஐயுற்றுப்பின், அது பற்றி நாம் ஏன் கவலல் வேண்டும்? அவ்விழா எவ்வாறு நடைபெற்றது என்பதே நாம் அறிய

வேண்டுவது. விழாவை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதைச் சமயக் கணக்கரும் பிறரும் முன்னர்ப் பேசினார்களாம். அரசனது மணங்கெழு முரசத்தைப் பட்டத்து யானைமேல் ஏற்றி, வள்ளுவ முதுமகனை அவ்விழாநாளைப் பற்றி நகர் நெடுகப் பறையறையச் செய்தார்களாம். அப்பறையறைந்தோன், 'முரசு கடிப்பிடூஉம் முதுகுடிப் பிறந்தோன்' என்று சிறப்பித்துப் பேசப்படுகின்றான். விழாவைப் பற்றி அம்முதுமகன் பறை சாற்றுமுன் 'திருவுடை மூதூர் வாழ்க!' என்று வாழ்த்தி, 'வானம் மும்மாரி பொழிக!' என்று போற்றி, 'மன்னவன் கோள் நிலை திரியாக் கோலோன் ஆகுக!' என்று பாராட்டி, மேலே விழாவைப்பற்றி முரசறைந்தான்.

விழாவினை விளக்கிய முதுமகன் அவ்விழாவில் மக்கள் செய்ய வேண்டுவனவற்றை நினைப்பூட்டுகின்றான். அமரலோகமும் வறிதாகப் போகுமாறு புகார் நகரை அலங்கரிக்கச் சொல்லுகின்றான் அவன். தெய்வங்களுக்குச் செய்ய வேண்டிய சிறப்புக்களை நினைவுறுத்துகின்றான் அவன். சமயவாதிகளைப் பட்டி மண்டபத்தேறி ஆராய்ச்சி செய்யத் தூண்டுகிறது அவன் வாய்ச்சொல். மக்கள் யாரிடத்தும் வேறுபாடு நீங்கி வாழ வேண்டிய பண்பாட்டை உணர்த்துகிறது அவன் உரை. 'பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க!' என வாழ்த்துகிறது அவன் வாய். இவ்வாறு விழாவில் மக்கள் ஆற்ற வேண்டிய சிறப்புக்களைச் சாத்தனார் வாக்கிற்படித்து இன்புற வேண்டும். அவர் அலங்கரிக்க விரும்பிய சிலவற்றை மட்டும் கண்டு, மேலே செல்வோம்.

'தோரண வீதியும் தோமறு கோட்டியும்[1]
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்;
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின்;
பத்தி வேதிகைப் பசும்பொன் தூணத்து[3]
முத்துத் தாமம்[4] முறையொடு நாற்றுமின்[4]
விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின்;
[5]கதலிகைக் கொடியும் காழூன்று விலோதமும்
[6]மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின்.'
(மணிமேகலை, *1: 43–53.*)

[1. மன்றம், 2. திண்ணை, 3. தூண், 4. தொங்கவிடுங் கள், 5. துகில், 6. கொடுங்கை.]

என்று விழாவை வகைப்படுத்திக் காட்டுகின்றார் சாத்தனார். இவ்வாறெல்லாம் புகார் நகர மக்கள் தாங்கள் கொண்டாடும் இந்திர விழாவைச் சிறப்புச் செய்ய வேண்டும். இவ்விழாவில் மக்கள் மட்டுமன்றித் தேவர்களும் ஒருங்குவந்து கலந்திருப் பார்கள் எனவும் அறிகின்றோம். இவ்வாறு கடற் கரையிலுள்ள அப்பெருநகரில் விழா நடந்த போது நாட்டின் பிற பாகங்களிலும் இவ்விழாவெவ்வேறிடங் களில் சிறப்பாக நடந்துகொண்டுதான் இருந் திருக்கும்.

இனி இவ்விழா, சித்திரை நிறைமதி நாளிலே தான் கொண்டாடப்பெற்றது என்பதை மணி மேகலை திட்டமாக விளக்காவிட்டாலும், சிலப்பதி காரம் நன்கு விளக்குகின்றது; விளக்குவதோடு இவ்விழா எவ்வெவ்வாறு கொண்டாடப்பெற்றது என்பதையும் குறித்துக் காட்டுகின்றது. மணி

மேகலை, விழாத் தொடங்குமுன் ஊர் எப்படி அமைந் திருக்க வேண்டும் என்பதை முரசறைவோன் மூலம் நமக்கு விளக்குகிறது. ஆனால், சிலம்போ, இவ் விழாவினை மக்கள் எவ்வெவ்வாறு துய்த்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. 'இந்திர விழவூ ரெடுத்த காதை' என்ற ஒரு பகுதியில் 240 அடி களில் இவ்விழா, அக்காலத்திலேயே வாழ்ந்த இளங்கோவடிகளால் நன்கு எடுத்துக்காட்டப் பெறுகின்றது. இக்காதையில் இவ்விழா ஆற்றிய நகரச்சிறப்பையும், பிற இயல்புகளையும் கூறி, இந்தி ரனை நீராட்டும் சிறப்பினையும் காட்டி, அடுத்த கட லாடு காதையில் நிறைமதிநாளில் மைந்தரும் மகளி ரும் கடலாடிக் கடற்கரையிலமர்ந்து காதற்கீதம் பாடிக் களித்திருப்பதையும் காட்டுகின்றார் இளங்கோவடிகள்.

புகார் நகரம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டிருந்தது. கடற்கரையையொட்டிய மருதூர்ப்பாக்கத்தே வாணிகம் செய்யும் வெளி நாட்டு உள் நாட்டு மக்க களும், பாணர் முதலியவர்களும், தொழிலாளர்களும் தங்கியிருந்தார்கள். அடுத்த பட்டினப்பாக்கத்தே அரசரும் அவரைச்சேர்ந்தோரும், படை மறவரும், அறிஞரும், பிறரும் தங்கியிருந்தனர். அவைகளுக் கிடையே நாளங்காடியும் இருந்தது. அந்த நாளங்காடியிலே இருக்கும் பூதத்திற்கு விழாத் தொடங்குகின்றது. அந்நாளை இளங்கோ அடிகள் 'சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்த நாள்' என் கின்றார். சித்திரைத்திங்கள் சித்திரை என்னும் நட் சத்திரம் சேர்ந்தநாள் அது. ஆம். அதுதான் நிறை மதி தோன்றி நிலத்தை மகிழச் செய்யும் 'சித்திரா பௌர்ணமி' என்னும் திருநாள்.

நாளங்காடிப் பூதத்திற்கு மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் ஆகிய இரண்டிடத்துமுள்ள மக்கள் கலந்து விழா ஆற்றுவதிலிருந்து இச்சித்திரை விழாத் தொடங்குகின்றது. அதற்கு அம்மக்கள் சுண்டல், எள் உருண்டை, மாமிசச்சோறு, பூ, புகை, பொங்கல்கொண்டு மேலான முறையில் சிறப்புச் செய்வார்கள் என்கின்ருர். பின்னர்க் குரவைக் கூத்தாடுவர் போலும்! அதற்குப் பின்னர் நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள மன்றங்களிலும், பொதியில்களிலும், கோயில்களிலும், பிறவிடங்களிலும் மக்கள் கூட்டம் கூட்டமாகக்கூடி, பலியிட்டுப் பாடிப்பரவிப் பூசனை புரிவார்கள்.

இப்பூசனை விழாக்களின் இறுதியிலும் முதலில் முன் நாம் கண்டது போன்றே அரசயானையின்மேல் வள்ளுவ முதுமகன் அமர்ந்து முரசறைவான் என்பதை,

> **"வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்**
> **கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி**
> **வால்வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்துக்**
> **கால்கோள் விழாவின் கடைநிலை"**

(சிலம்பு, 5 : 113–16)

சாற்றுவன் என்று கூறுகின்றனர். தெருவெல்லாம் முன் கண்டபடி அலங்கரிக்கப் பெற்றிருக்கும், அரசனுக்கு உடன் துணையாளராகிய ஐப்பெருங்குழுவும், எண்பேராயமும், அரச குமரரும், பரத குமரரும், யானை குதிரை இவைகளின்மேல் ஏறிச் சென்று, காவிரியின் நல்ல நீரைக் கொணர்ந்து, மண்ணகம் மருள, வானகம் வியப்ப, விண்ணவர் தலைவனை நீராட்டுவர். பின் பிறவா யாக்கைப் பெரியோனுகிய சிவபெருமான் கோயில் முதலாக எல்லாக் கோயில்

களிலும் சிறப்பு விழாக்கள் நடைபெறும். ஆம்! புகார் நகரிலே பல வகைச் சமயத்தார்கள் இருந் தார்கள் என்பதைக் காண்கின்றோம். பட்டி மண்ட பம் ஏறி அச்சமயவாதிகள் இவ்விழா நாளிலே தத்தம் சமயம் பற்றி ஆராய்ச்சி செய்தார்கள் என்பதையும் அறிகிறோம். ஆகவே, இவ்விழாவில் யாதொரு வேறுபாடுமின்றி எல்லாச் சமயத் தவரும் கலந்துகொண்டனர் என்பது வெளிப்படை. அதைப்போன்றே வாணிகத்தின்பொருட்டும் பிற வகையிலும் பிற நாடுகளிலிருந்து அந்தப் புகார் நக ரில் வந்து தங்கியிருந்த அத்துணை மக்களும் இவ் விழாவில் பங்கு கொண்டார்கள் என்பதும் தெரி கிறது. எனவே, இவ்விழா, சாதி சமய வேறுபாடற்ற ஒரு விழா. மக்கள் வாழ்வில் எத்துணை மாற்றங் கள் இருப்பினும், இவ்விழாவில் அனைவரும் ஒன்றி யிருந்தார்கள் என்பது தெரிகின்றது. இவ்வாறு, தெய்வங்களுக்குச் சிறப்புச் செய்ததைக் கண்டோம். அதை இளங்கோ அடிகள், 'வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்' என்று வீறு பெறக் கூறு கின்றார்.

தெய்வங்களுக்கு வழிபாடாற்றும் நிலை ஒருபுறம் நிற்க, இவ்விழா, பகையும் பிணியும் பசியும் நீங்கி வாழ வேண்டிய விழா அல்லவா? அதுதானே தமிழ் நாட்டு விழாவின் அடிப்படையாகும். எனவே, புகாரில் ஆண்ட சோழமன்னன் அன்று கூடா மன்னர்தம் அடித்தளை நீக்கி விடுவிக்கின்றான். பாணர் பாடுகின்றனர். கூத்தர் கூத்தாடுகின்றனர். அறிஞர் ஆராய்ச்சி செய்கின்றனர். மேடைகளில் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. முழவுக் கண் துயிலாத விழவு நாடுமுழுதுமே சிறந்திருந்தது.

விழா வசந்தம் பற்றி எழுந்த விழா அன்றோ? வசந்தனாகிய காமன் இவ்விழாவில் பங்கு கொள்ளா திருப்பனோ? காமன் சேனையும், கைம்மலர் வாளியும் பல்வேறு வகையில் அப்பரந்த விழாவிலே பங்கு கொண்டிருந்ததை இளங்கோவடிகள் அழகுபட எடுத்துக் காட்டுகின்றார். கணவரொடு கூடிக்கலந்த கற்புடைப் பெண்டிர்தம் பெருநெறியும் பேசப்படு கின்றது. கணிகையர் களியாடல்களும் காட்டப் படுகின்றன. ஊடியிருந்த மகளிரெல்லாம், இவ்விழா வின்பொருட்டு வந்த விருந்தாளிகளால் கூடுதல் பெறுகின்றனர். சிலரது ஊடலோ, 'இவ்விருந் தால் நீங்கப் பெறாத ஊடல் பின் நீங்குவ தெவ் வாறு?' என்று கணவர் கவலும் வகையில் செல்லு கின்றது. இவ்வாறு மைந்தரும் மகளிரும் விழா நாளில் கொள்ளும் நிகழ்ச்சியைப் பற்றிக் கூறும் சிறப்புக்கள் நூல் வழியே சென்று அறியத் தக்கன. அவர்களை அவர்தம் காதல் இன்பத்திற் களிக்க விட்டு, நாம் விழாவினைப்பற்றி மேலே காண்போம்.

இந்தச் சிறப்புக்களையெல்லாம் அடுத்துத் தான் கடலாடும் கவின் அமைகின்றது. இவ்விழா வின் இறுதியிலே அந்நகரமாந்தர் அனைவரும் கட லாடச் செல்கின்றனர். அவரவர் தத்தம் ஊர்திகளில் ஏறிக் கடற்கரைக்குச் செல்லும் காட்சியே தனிச் சிறப்புடையது. அவர்கள் செல்லும் அந்த நெறி யிலேதான் கோவலனும் மாதவியும் சென்றார்கள் என்று காட்டுகின்றார் இளங்கோவடிகள். இவ் விடத்து, அக்கடற்கரை விழாவில் உள்ள கடைக ளைப்பற்றியும், பொருள்களைப் பற்றியும் பலபடப் பாராட்டுகின்றார் ஆசிரியர். அவைகளெல்லாம் நமக்கு இப்போது வேண்டா.

"உருகெழு மூதூர் உவவு[1]த்தலை வந்தெனப்
பெருநீர் போகும் இரியல் மாக்களொடு
மடலவிழ் கானல் கடல்விளை யாட்டுக்
காண்டல் விருப்பொடு வேண்டின ளாகி"

(சிலம்பு, 6: 111–14)

மாதவி கோவலனோடு சென்றாள் என்பதை மட்டும் கண்டு மேலே செல்வோம்.

விடியற்காலையில் புறப்பட்ட மக்கள் அனைவரும் கடற்கரையில் சேர்ந்து, தத்தமக்கென்று முன்னமே அமைத்த கடற்கரைச் சோலைகளிலும் தாழைகளின் பக்கங்களிலும், பந்தர்களிலும் தங்கியிருந்து, கடலாடியும், களிப்பு மிக உண்டும் உடுத்தும் அந்த நிறைமதி நாளாகிய சித்திரைப் பௌர்ணமியைக் கொண்டாடுகிறார்கள். அவ்விழாவை நினைக்கும் போது இளங்கோவடிகளுக்கு அந்நாட்டு மன்னருள் சிறந்த கரிகாலன் நினைவு வருகின்றது. அவன் புதுப்புனல் விழாக் கொண்டாடுவது போன்று அமைந்த விழா என்று இதை அவர் குறிக்கின்றார். இப்படி அனைவரும் இவ்விழாவில் ஈடுபட்டு, கடலாடி, களித்துண்டு, மகிழ்ந்து பாடியும் ஆடியும் காவிரிக்கரையில் தம்மை மறந்திருந்த அந்த வேளையிலேதான் மாதவியையும் கோவலனையும் பிரித்து வைத்த 'கானல் வரி' பிறந்தது என்று கடலாடு காதையை முடிக்கின்றார் ஆசிரியர். நாமும் அக்காதையை விட்டு விழாவைக் காண்போம்.

இச்சித்திரைத் திருவிழா இந்த இரு பெருங்காவியங்களைத் தவிர, வேறு எந்தநூலிலும் அவ்வளவு சிறப்பாகப்பேசப்படவில்லை. என்றாலும், தமிழ்நாட்டு

1. நிறைமதி நாள்

மக்களுக்குப் பங்குனியும் சித்திரையும் கலந்த அந்த இளவேனிற்பருவத்தைக்காட்டிலும் வேறு மகிழ்ச்சி தரும் நாள் இல்லை என்பது ஒருதலை. ஆடிதொடங்கி வயலில் உழைத்து: பெற்ற பலனைக் கார்த்திகை யிலும் மார்கழியிலும் கைக்கொண்டு, பின் தையில் பெற்றதை மற்றவருக்குப் பங்கிட்டு, பொங்கல் விழா ஆற்றி, பனி வாடையும் குளிரும் நீங்க, இரண்டு திங்கள் இருந்து, பின் தோன்றும் இந்த வேனில் நாளை 'என்று வரும்! என்று வரும்!' என்று தமிழன் எதிர் நோக்கியிருந்திருப்பானே! எங்கோ கிடந்த சுந்தரமூர்த்தி நாயனாரை இந்தச் சித்திரை விழாத் தானே திருவாரூருக்கு ஓட வைத்தது? மனிதன் மட்டுமல்லாது, மரமும் செடியும், விலங்கும் பறவை யும் இந்தக் காலத்திலேதானே ஆடிப்பாடி அகமகிழ் கின்றன? தமிழர்தம் ஓர் ஆண்டு வாழ்வில் மகிழ்ச்சி யாக இருக்கும் பருவம் இந்தப் பருவந்தானே? வேனில் வேள் என்று மன்மதன் குறிக்கப் பெறு வது இந்த மகிழ்வினால்தானே? இன்பம் விளை விப்பவன் மன்மதன். அவ்வின்பம் வேனிற்காலத் தில் விளைகின்றது. ஆகவே, அவன் வேனில் வேள் ஆனான். இந்த நாளிலே பூவர் சோலைக்குயில் பாடுகின்றது. இதை எண்ணித்தானே இளங் கோவடிகளும்,

> 'பூவர் சோலை மயிலாடப் புரிந்து குயில்கள் இசைபாடக்
> காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி!'

என்று கானல் வரியினைப்பாடுகிறார்? நாம் முன்னமே கண்டபடி, அன்றுமட்டுமன்றி, இன்றும் இந்நாட்டு மக்கள் இச்சித்திரை விழாவை நன்கு பாராட்டிக் கொண்டாடுகிறார்களே! அந்தச் சித்திரை நிறைமதி

நாளில் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் திருவிழாக்கள் இன்றும் நடைபெறுகின்றனவே! மைந்தரும் மகளிரும், ஆற்றிலும் குளக்கரைகளிலும் அந்த ஒளிநிலா முற்றில் உல்லாசமாகத் தம்மை மறந்து நிற்கும் நிலையினைக் காண்கின்றோமே! கண்ட உள்ளத்தால் 'சித்திரை விழாச் சிறக்க!' என்று வாழ்த்துவோம். இது நிற்க.

இந்திர விழா இருபத்தெட்டு நாட்கள் தொடர்ந்து நடைபெறும் என்றும், அதன் இறுதி நாளே கடலாடு விழாவாகும் என்றும் கண்டோம். எனவே, இவ்விழா அன்று—அதாவது சித்திரை நிறைமதி நாளில் — ஆரம்பமாகிறதா, அன்றி முடிகிறதா என்று கேட்கத் தோன்றும். அது ஆராய வேண்டிய ஒன்று. ஆராய்ந்து நோக்கின் அந்த இருபத்தெட்டு நாட்களின் இறுதி நாள் சித்திரை நிறைமதி நாளே தவிர, முதல் நாள் ஆகாது. சிலப்பதிகாரம் 'சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென' அந்நாளில் மன்னனுக்குற்ற இடர் நீங்கும் வகையில் விழாத் தொடங்கியது என்று கூறுகின்றது. ஆனால், திட்டமாக அந்த நாளிலேதான் தொடங்கியது என்று கொள்ளுமாறு அவ்வடி அமையவில்லை. தேவேந்திரன் ஏவலாலே சதுக்கப் பூதம் வந்து அந்த நிறைநாள் முதலாக நெடுநாள் அங்கிருந்து உணவு கொள்கிறது என்றுதான் உரையாசிரியர்களெல்லாம் குறிக்கின்றார்கள். அந்த நாளில் அப்பூதத்திற்குப் பெருவிருந்து நடைபெறுகிறது என்பதுதான் அதன்பொருள். எனவே, அதுதான் இறுதி நாளாகிய கடலாடு நாள். இன்றைக்கும் சித்திரா பௌர்ணமிக்கென்று கோயில் தோறும் கொடியேற்றிக் கொண்டாடப்பெறும்

விழாக்கள். தொடங்கும் விழாக்கள் அன்று முடிக்கப் பெறுகின்றனவே ஒழிய, தொடங்கப் பெறுவதில்லை. அதற்குப் பத்து நாட்களுக்குமுன் கோயில்களில் கொடியேற்று விழாவாற்றி, நிறைமதி நாளில் பெருஞ்சிறப்புச் செய்து விழாவை முடித்துக் கொடி இறக்குகின்றனர். அதே முறையிலேதான் அன்றும் இந்த விழா நடைபெற்றிருக்கும்.

சித்திரை நிறைமதிக்கு இருபத்தெட்டு நாட்களுக்கு முன்பே—அதாவது பங்குனிப் பருவம் கழித்து இரண்டு நாட்களுக்குப்பின்—இவ்விழாத் தொடங்கப்பெற்றிருக்கும். பங்குனியும் வசந்தத்தின்பாற்பட்டதுதான். வசந்த காலத்தையே பங்குனிப் பருவம் என்றுதானே கூறுவார்கள்? (வசந்த விழாவைப்பற்றி நூலில் மற்றொரு கட்டுரையில் காணலாம்) ஆகவே, வசந்தத்தைத் தொடங்கும் முதற்பருவமாகிய பங்குனிப் பருவத்தை ஒட்டித் தொடங்கப்பெறும் இவ்விழா, சித்திரை நிறைமதியில் நிறைவுற்றுச் சிறப்பெய்துகின்றது.

இவ்வாறன்றி, சித்திரை நிறைமதியிலேதான் தொடக்கம் என்றால், அடுத்த இருபத்தெட்டு நாட்கள் கழித்து வைகாசி நிறைமதிக்கு முன் இரண்டு நாட்களில் கடலாடு விழா வரும். வைகாசித் திங்களின் முதுவேனிலினுடைய கொடுமையை அறியாதார் யார்? தவிர, அது நிறைமதிக்கு இரண்டு நாள் முற்பட்டதாக இருக்குமே தவிர, சிலப்பதிகாரம் கூறியபடி நிறைமதி நாளாகாதே! மற்றும் வைகாசிக் கோடையில் கடற்கரை மணற்பரப்பில் ஒரு நாள் முழுதும் இருக்க முடியுமா? மேலும், இச்சித்திரை நிறைமதிக்கு மறுநாள் புறப்பட்ட கோவலன் கொடுங்

கோடையை வழியில் அனுபவிக்கின்றான் என்பதையும், அக்கோடையிலும் 'வேட்டுவவரி' பாடி வேடுவர் மகிழ்கின்றார்கள் என்பதையும் இளங்கோவடிகள் பின் ஓர் இடத்தில் காட்டுகின்றார். (அதையும் இந்நூலுள் காண்போம்) அதனால், இவ்விழா, சித்திரை நிறைமதியில் நிறைவுறும் கடலாடு விழா என்று கொள்வதே சிறந்ததென்று நான் கருதுகின்றேன்.

எப்படியும் இச்சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்த நிறைமதி நாள் விழா—தமிழர்தம் அன்புத் திருவிழா — காதற்பெருவிழா — களி துளும்பும் நல் விழா என்று கூறி நம் உரையை முடிப்போம்.

மந்தமாருதம் வீசும் இளவேனிலில் வசந்த இன்பத்தை அனுபவிக்கும் தமிழர்கள்—மார்கழி தை மாதங்களின் தண்ணிய குளிர்நலனைத் துய்க்கும் தமிழர்கள்—அவ்வக்காலங்களில் விழாக்கள் கொண்டாடும் தமிழர்கள்—வாட்டும் வேனிற்காலத்தையும் நன்கு துய்க்கக் கற்றிருந்தார்கள். வேண்டுதல் வேண்டாமையின் அடிப்படையில் அவர்கள் வாழ்வு அமைந்திருந்தது. எதையும் ஏற்றுத் தாங்கி அவ்வவற்றிலும் இன்பம் கண்டார்கள் அவர்கள். எனவே, வாட்டும் வாடையும் கொட்டும் மழையும் அவர்தம் உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டியன போன்றே, கொடிய கோடையும் அவர்களுக்கு இன்பமளிக்கும் காலமாயிற்று. எல்லாக் காலங்களிலும் விழாவாற்றி மகிழ்ந்த மக்கள், இவ்வேனிலையும் மறந்து விழாவில் மகிழ்ந்து சிறந்தார்கள்.

வேனில் என்பது வைகாசி மாதத்தை ஒட்டித் தகிக்கும் வெயிற்காலமாகும். இதை 'முதுவேனில்'

என்னும் இலக்கியம். இன்பம் பயக்கும் இள வேனிற்காலத்தை அடுத்து, கொடும் வெயிலை வீசும் காலமாதலால், இது 'முதுவேனில்' எனப் பட்டது போலும்! இவ்வைகாசியிலேயும் தமிழ் நாட்டில் பலவிடங்களில் கோயில்களில் விழா நடப்பதை யாரே அறியாதார்! காஞ்சியில் வைகாசி நிறைமதியில் நடக்கும் கருடசேவையையும், திருச் செந்தூரில் நடக்கும் பெருவிழாவையும் நாம் மறந் தாலுங்கூட, இரெயில்வே நிருவாகிகள் நமக்கு நினை வூட்டத் தவறுவதில்லையே! இன்னும் எத்தனையோ ஊர்களில் வைகாசி விழா போற்றப்படுகின்றது.

ஒவ்வொரு திங்களிலும் நிறைமதி நாட்களை நன்கு துய்க்கும் தமிழர்கள், இந்த நிறைமதி நாளை மட்டும் விட்டு வைப்பார்களா? மாட்டார்கள். தகிக்கும் வெயிலின் கொடுமையை மாற்றும் சத்தி, இனிய குளிர்மதி ஒளிக்களுக்கன்றி, வேறு எதற்கு உண்டு? எனவே, இவ்வைகாசி நிறைமதியும் தமிழர் களுக்குப் பெருவிழா நாளாக அமைகின்றது. நிறைமதி தோன்றும்நட்சத்திரங்களின் பெயர்களைக் கொண்டே ஆண்டில் வரும் திங்களுடைய பெயர் களை அமைத்தார்கள் என்பதைக் கண்டோம். அதைப்போன்றே இந்த நிறைமதியும் விசாகநட்சத் திரத்தில் வருகின்றது. எனவே, இம்மாதம் விசா கத்தை ஒட்டி 'வைகாசி' என்று அழைக்கப் பெறு கிறது.

இவ்வைகாசி மாதத்திலே — கோடையிலே — பெரும்பாலும் வேட்டுவர் விழாக் கொண்டாடுவர். கிராமங்களிலே ஊர்த்தெய்வங்களுக்கு வழிபாடு நிகழும். காளி, துர்க்கை, கங்கையம்மன் போன்ற

தெய்வங்களை இக்காலத்தில் வழிபடுவதை இன்றும் கிராமங்களுக்குச் சென்றால் காணலாம். 'கூழ் ஊற்றும் விழா'வாக இதைக்கொண்டாடுவார்கள் ஊர் மக்கள். நாட்டுப்புறங்களில் உள்ள எல்லாரிடமும் கேழ்வரகும் அரிசியும் பிற பொருளும் வாங்கி, அவற்றைக் கூழாக்கி, அம்மனுக்கு விழா ஆற்றி, அக்கூழினை ஏழை எளியவர்களுக்கெல்லாம் ஊற்றி மகிழும் வழக்கம் இன்றும் உள்ளது. அக்கூழ் ஊற்றும் விழாக்களுக்கு முன் சில நாட்கள் அவர்கள் தெருத்தோறும் ஆடியும் பாடியும் மகிழ்வார்கள். கங்கையம்மன் கூத்து என்ற ஒரு பழைய நாடகத்தை அவர்கள் ஆடி மகிழ்வார்கள். தெருத்தோறும் அக்கூத்தர் பெண் வேடம் புனைந்தும், வேறு வகை வேடங்கள் ஏற்றும் விளையாடும்காட்சி உளமுருக்கும் காட்சியாகும். அவர்கள் ஆட்டங்களில் கிருஷ்ணன் கோபிகைகளுடன் விளையாடுவதும் வேடிக்கை காட்டுவதும் உண்டு. இப்படிச் சிலநாட்கள் தெருத்தோறும் ஆடிப்பாடி, வீடுதோறும் அளிக்கும் நெல்லையும் கேழ்வரகையும் கொண்டு இறுதி நாளாகிய வைகாசி விசாக நாளிலே அவர்கள் கூழாக்கிப் படைத்து, ஏழைகளுக்கு ஊற்றி மகிழ்வார்கள். விழா மற்றவர் வாழத் தாம் வாழ்தலே என்பதைக் கோடையாலும் மறவாது போற்றும் விழாவாக இது காட்சி அளிக்கின்றது.

கங்கை அம்மனோ, அன்றிக் காளியோ தங்கியிருக்கும் கோயில், நல்ல வளமார் சோலைக்குள் இருக்கும். அக்காலத்து ஊர்களே சோலை நடுவிலே தான் இருக்கும். இன்றும் நல்ல ஊர்களைச் சுற்றிச் சோலைகள் சூழ்ந்திருப்பதைக் காண்கின்றோமே! இக்காலத்தில் எங்கு நோக்கினும் மரங்கள் வெட்டப்

படுகின்றன; சோலைகள் அழிக்கப்படுகின்றன. அதனால், காட்டு வளமும் பிற வளங்களும் குறைவுறுகின்றன. அதனால், மழையே வளம் குறைந்து விடுகின்றது என்பதையும் காண்கின்றோம். இக்குறையைப்போக்க அரசியலார் 'வனமகோற்சவம்' என்ற செடி நடும் திருவிழாக்களை ஆண்டுதோறும் கொண்டாடுகிறார்கள். எனினும், அச்செடிகளுள் பல தளிர்ப்பதற்குமுன்பேபட்டுப்போகின்றன. இப்படித் தும்பை விட்டு வாலைப் பிடிப்பதைவிட, அரசாங்கத்தார் உள்ள மரங்களை வெட்டாது பாதுகாக்க நல்ல முறைகளையும் சட்டங்களையும் கையாண்டால், உள்ள மரங்களாவது ஓரளவு நிலைக்கும். அது பற்றி இங்கு நமக்கு ஆராய்ச்சி வேண்டா!

நல்ல குளிர்ந்த சோலைதானே கோடைக்கு ஏற்ற இடம்? 'கோடையிலே இளைப்பாறிக்கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே, தரு நிழலே,' என்று இராமலிங்கர் இக்குளிர் மரங்களையும், அவற்றால் பெறும் நிழலையும் தாமே இறைவன் தன்மையாக ஏற்றம் தந்து பாடுகிறார்? ஆகவே, கோடையில் மகிழ்ச்சி அளிப்பது குளிர்நிழல். அக்குளிர் நிழல்தரும் சோலைகளுக்கு இடையிலேதான் கன்னி, ஐயை, காளி, கங்கை முதலிய தெய்வங்களின் கோட்டங்கள் இருக்கும். வெளி உலகில் தெரியும் வேனிலின் கொடுமை தெரியாத நிலையிலே அங்கே மக்கள் ஆடியும், பாடியும், கூழ் அட்டும், மற்றவருக்கு ஊற்றியும் மகிழ்வார்கள். இவ்விழாவே வேனில் விழா எனப்படுவது.

இளவேனில் விழாவினைப்பற்றிச் சிலப்பதிகாரம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. சித்திரை நிறை

மதி நாள் கழிந்த பின் காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுப் புறப்பட்ட கோவலனும் கண்ணகியும் வழியிடைக்கண்ட கவுந்தி அடிகளுடன் மதுரைமாநகர் நோக்கி வருகின்றார்கள். அவர்கள் புகாரிலிருந்து மதுரை சென்று சேர இரண்டு மாதங்களுக்கு மேலாகின்றன. ஆடியில் மதுரை அழிகின்றது. சித்திரையில் கானல் வரி பாடப்படுகின்றது. ஆகவே, இடைப்பட்ட வைகாசியும் ஆனியும் அவர்கள் வழி நடைக்காலமாகும். அந்த வெம்மையில்—பாவம்—அம்மூவரும் நடந்து செல்லும் நிலை இளங்கோவடிகளது துறவுள்ளத்தையும் தொடுகின்றது! வேனில் கொடுமையை அவர்,

"கடுங்கதிர் திருகலின் நடுங்கஞர் எய்தி
ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்ப
நறும்பல் கூந்தல் குறும்பல உயிர்த்தாங்கு
ஐயை கோட்டத்து எய்யா ஒருசிறை
வந்துநோய் தணிய இருந்தனர்." (சில. 12 : 1–5)

என்று காட்டுகின்றார். ஆம்! அக்கொடுமையைத் தாங்காத கோவலனும் கண்ணகியும் கவுந்தியும் ஐயை கோட்டத்தை அடைந்தனர். அந்தக் கோட்டத்தை ஏன் அவர்கள் அடைந்தார்கள்? அது அக்கோடை வெம்மையை மாற்றக் கூடிய வகையில் சோலைக்கிடையில் இருந்தமைதான் காரணம் என்று முன் காடு காண் காதையிலே குறிக்கின்றார் ஆசிரியர். அக்கோட்டம் குரா மரா முதலிய மரங்கள் நெருங்கி அழகிய பூக்கள் நிறைந்த சோலையாய் விளங்கிற்று என்கிறார் அவர்.

'குரவமும் மரவமும் கோங்கமும் வேங்கையும்
விரவிய பூம்பொழில் விளங்கிய இருக்கை'
(சிலம்பு. 11: 207 – 8)

என்று அவர் கூறுவது கோடையிலும் குளிர் வீசும் வகையில் நம் உள்ளத்தைத் தொடுகின்றதன்றோ?

இந்த மூவரும் தங்கிய ஐயை கோட்டத்திலே தான் இளங்கோவடிகள் நமக்கு வேனில் விழாவைக் காட்டுகின்றார். அக்கோடைக்குப் பயந்து ஐயை கோயிலின் ஒரு பக்கத்தே இவர்கள் தங்கிய அந்த நாள், விழா நாளாகும். அக்காட்டிலே வாழும் வேடுவர் அத்தெய்வத்துக்கு அன்று விழா ஆற்று கின்றனர். அவர்கள் விழாவாற்றும் முறையை அழ காக விளக்குகின்றார் ஆசிரியர்.

அவ்வேடுவர் குலத் தேவராட்டியாகிய சாலினி, அவ்விழாவின் முதல்வி போலும்! அவள் உடன் நின்ற மற்றவர் வியக்கும்படி மயிர்க்கூச்செறிந்து ஊர் நடுவிலே உள்ள மன்றத்தில் கால் பெயர்த்து ஆடுகிறாள். அவளுக்கு ஊர்தோறும் பழங்கடன் தந்து போற்ற வேண்டும் போலும்! தாராவிட்டால் அவ்வூர்கள் பாழ்படும் போலும்! எப்படிப்பட்டவர் களையும் வழியிடை வருத்திப் பொருள் பறிக்கும் கொடும் படைக்கலங்களைக் கையில் தாங்கிய அவ் வேடுவர் அனைவரும், அச்சாலினியின் தெய்வத் தன்மையைக் கண்டு, வாயடங்கி, ஒடுங்கி, அஞ்சி நின்றனராம். அந்த நிலையிலே அச்சாலினிமேல் தோன்றிய தெய்வம் தனக்குத் தரவேண்டிய பழங் கடனைத் தருமாறு வேண்டுகின்றது. அவ்வேடு வரும் அவ்வாறு வேண்டிய நிலையிலே தம் பழங் குடியிலே பிறந்த ஒரு செல்வியைக் கொற்றவையின் கோலத்தில் அலங்கரிக்கின்றனர். பழங்கடன் என் பது ஊர்க்குடிகள் ஒவ்வொருவரும் அத்தெய்வத் திற்குத் தருவதாக முன்னரே வாக்களித்த ஒன்று

போலும். வீட்டில் நோயும் நலியும் வந்தால், தம் குல தெய்வத்தைப் போற்றி வழிபாட்டு, விழாக் காலத்தில் காணிக்கை செலுத்துவதாகப் பிரார்த்தனை செய்துகொள்வது இன்னும் வழக்கந்தானே. அப்பிரார்த்தனையைச் செலுத்துவதே பழங்கடன் போலும்.

பொன் நாணினால் சடையை முடியாக்கினர்; பன்றியின் கொம்பைப் பிறையாக அணிவித்தனர்; புலிப்பற்களை அழகிய தாலி என்னும் ஆபரணமாகக் கட்டினர்; பல விலங்குகளின் தோல்களை ஆடையாக அணிவித்தனர்; வயிர வில்லைக் கையில் கொடுத்தனர்; கலையின்மேல் அவளை ஏற்றி உட்கார வைத்தனர். கிளி, மயில், கானக்கோழி, பந்து, கழங்கு ஆகியவற்றைத் தந்தனர். எள்ளுருண்டை, மாமிசம் ஆகியவற்றுடன் கூடிய சோற்றினை இட்டனர். மணப்பொருள்களாகிய பூவும் புகையும் தூவினர். இவ்வாறு சிறப்புக்களையெல்லாம் செய்து, பணிப்பெண்கள் பின்னே வர, பல வாத்தியங்கள் முழங்க, அத்தெய்வத்தை ஐயை கோட்டத்திற்கு அழைத்து வருகின்றனர். வந்ததும் முதலில் உள்ள பலிபீடத்தை வணங்கி உள் புகுகின்றனர். அங்கே தங்கியிருந்த கண்ணகியைக் கண்டு தெய்வ உருவில் நின்ற பெண் பேசிய சொற்களைப் பின் ஆசிரியர் காட்டுகின்றார். அவை நமக்கு இங்கு வேண்டா. இறுதியாக, அவ்வேடுவர் ஐயை கோட்டத்தில் ஆடிப்பாடிய காட்சியைக் காட்டிக் காதையை முடிக்கின்றார். அவர்தம் பாடலாகப் பல சிலப்பதிகாரத்திலே இடம் பெற்றுள்ளன. அவற்றுள்,

'சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றுயால்

கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறையேத்த வேநிற்பாய்!
'சுடரொடு திரிதரு முனிவரும் அமரரும்
இடர்கெட அருளும்நின் இணையடி தொழுதேம்
அடல்வலி எயினர்நின் அடிதொழ கடனிது
மிடறுகு குருதிகொள் விறல்தரு விலையே.'

என்பனவும் அடங்கும். இவ்வாறு அத்தெய்வத்தை வாழ்த்தி விழாக் கொண்டாடினுர்கள் என்று முடிக்கின்ருர் இளங்கோவடிகள். இப்பாடல்களுள் இறைவனேடு தங்கிய உமையம்மையை உள முருகி வேண்டுவார் வேண்டிய காட்சி வெளியாகின்றதன்ருே! எனவே, வேனில் விழா, சோலை சூழ்ந்த ஐயை கோட்டம் முதலியவற்றில் நடைபெறும் முக்கியமான விழா என்பது நன்கு புலனுகின்றதன்ருே?

வைகாசி விசாகமாகிய பௌர்ணமி இவ்வாறு வேடுவருக்கும் மற்றவர்களுக்கும் மட்டுமன்றி, பிறருக்கும் சிறந்த விழாவாக அமைகின்றது. திருச்செந்தூர் செல்பவர்கள் இவ்வைகாசி விசாகத்தில் ஆங்குள்ள ஆறுமுகனுக்கு நடைபெறும் விழாவினைக் கண்டு மகிழ்ந்திருப்பார்கள். ஆம்! இந்த வைகாசி விசாகந்தான் முருகன் பிறந்தநாள் என்று புராணம் கூறுகின்றது. எனவே, சைவர்களுக்கு இந்த விசாகநாள் ஒரு சிறந்த நாளாகும். முருகன் தங்கியிருக்கின்ற பெருங்கோயில்களிலெல்லாம் இவ்விசாகத்திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பெறும். முருகனுக்கே 'விசாகன்' என்னும் ஒரு பெயர் இதனுல் ஏற்பட்டதுதானே? இவ்விசாகநாளில் திருச்செந்தில் முருகனுக்குப் பன்னீர் அபிடேகம் செய்வார்கள் அடியவர்கள். மக்கள் கோடையின் வெம்

மையைக் குளிரவைப்பார்கள். நல்லவர்கள், நாடெங்கும் பலப்பல தண்ணீர்ப்பந்தர்கள் அமைப்பார்கள்; தங்குமிடம் அமைப்பார்கள். இவ்வாறு வேனில் விழா, விசாகத்தில் பிறந்த முருகனுக்கு விழாவாற்றும் சிறப்பாகவும் முடிகின்றது.

இன்னும் ஒன்று: சிறப்பாக இன்று நம் நாட்டு அரசாங்கமே மேற்கொண்ட விழாதான் இது. ஆம்! இந்த வேனில் விழா நாளாகிய வைகாசி விசாகமாகிய நிறைமதி நாளிலே போதி நீழற்பெருமான் புத்த தேவர் உலகில் தோன்றி நலம் புரிந்தார். இந்த நாளை இன்று நம் இந்திய அரசாங்கத்தார் விடுமுறை நாளாகவே செய்துவிட்டார்கள். அடுத்து வரும் புத்தர் பிறந்த நாள்—வைகாசி விசாக நாள் 2500-ஆம் பிறந்த நாளாக இருப்பதால், நாடெங்கும் சிறந்த முறையில் அந்நாளைக்கொண்டாட ஏற்பாடுகளையெல்லாம் செய்து வருகின்றனர். அறவாழி அண்ணல் புத்தர்பிரான் தங்கிய கோயில்களிலெல்லாம் இந்நாள் பெருவிழா நாளாகக் கொண்டாடப் பெறுகின்றது. உலகெங்கணும் வாழும் புத்தர்களுக்கெல்லாம் இந்நாள் ஒரு புனித நாள். நாட்டையும் உலகையும் வாழ வைக்க வந்து தோன்றிய வள்ளல் நாளைக் கொண்டாட யார்தாம் மயங்குவர்! வளமார்ந்த அரச வாழ்வையும் கண்ணனைய மனைவியையும் மைந்தனையும் விட்டு, மக்கள் வாழ்வைத் தம் வாழ்வாக–ஏன்–பிற உயிர்களின் வாழ்வே தம் வாழ்வாக வாழ்ந்து மன்பதைக்கு வழிகாட்டிய அண்ணல் புத்தர் விழா இவ்வேனில் விழாவேயாகும். எனவே, வெப்புறும் வெம்மை நாளிலுங்கூட மக்கள் மகிழ்ந்து விழாவாற்றும் சிறப்பு இன்றும் அன்றும் என்றும் நிலவும் நல்லதொரு

பெருஞ்சிறப்பாகும். அச்சிறப்பு நம் தமிழ் நாட்டில் மிகவும் பழங்காலந்தொட்டு நிகழ்ந்து வருகின்றது என்பதைக் காண நாமெல்லாம் மகிழாதிருக்க முடியுங்கொல்! இன்றும் இந்நாட்டில் குமுறும் கோடையிலே, கோடிக் கணக்கான மக்கள் உள்ளத்தைக் குளிர வைக்கும் விழாக்களைக் கொண்டாடி மகிழும் சிறப்பைக் கண்டு நாம் நம்மை மறக்கும் நிலையில் உள்ளோமே! வாழ்க இவ்வேனில் விழா!

# ஓண விழா ★

ஓணம் என்றதும் நம் அனைவர் நினைப்பும் மலையாளிகளைச் சென்று சேரும். அவர்களே இந்த விழாவினை ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். ஆவணி மாதத்து முழு மதியுடன் கலந்த திருவோண நட்சத்திரம் பெரும்பாலும் இந்த விழாவின் நாளாக அமைகின்றது. மலையாளிகளுக்கு இந்த நாளே ஆண்டின் மிகமிகச் சிறந்த நாள். மலையாளிகள் ஆண்டில் மூன்று முக்கியமான பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். மார்கழியில் வரும் திருவாதிரை விழாவும், புத்தாண்டுத் தொடக்கமாகிய விழாவும், இவ்வோணமும் அவர்தம் உயர்ந்த விழாக்கள். அவற்றுள்ளும் இந்த ஓணமே சிறந்தது. இன்று மலையாளிகள் தங்கள் வாழ்வின் ஒரு திருநாளாகக் கொண்டாடும் இத்திரு விழா, தமிழர்தம் பெருவிழாவாய் இருந்தது என்று கூறின், பலர் வியப்பெய்துவர். பெற்றது கொண்டு தாமும் சுற்றமும் உண்டு மகிழ்ந்திருந்த ஒரு விழா

வாக ஓண விழாத் தமிழ் நாட்டில் நடைபெற்று வந்தது. சைவர் வைணவர் என்ற இரு வேறு வகுப்பினரும் இந்நாட்டில் இவ்விழாவினைக் கொண்டாடி, இவ்விழாவின் மூலம் ஆண்டவனைப் போற்றிய காலம் இருந்தது என்பதை எண்ணும் போது மகிழ்ச்சி பிறக்கின்றதன்றோ?

தேவாரம் பாடிய ஞானக்குழந்தை சம்பந்தரைப் பற்றி அறியாத தமிழர் இருக்க மாட்டார்கள். அவர் தமிழ் நாட்டுத் தலந்தோறும் சென்று இறைவனைப் பாடிப் பரவி வந்தவர். இப்போது சென்னையின் பகுதியாய் இருக்கும் மயிலாப்பூர் என்னும் திருமயிலைக்கு அவர் இறை வழிபாட்டின் பொருட்டு வந்தார். அவ்வூரில் இன்று 'கபாலி' என்னும் பெயருடன் இறை கோயில் கொண்டுள்ளனர். அன்றும் அக்கடவுள் அதே பெயரோடுதான் அடியவருக்கு அருள் புரிந்தார். மயிலையில் வாழ்ந்த செட்டியார் ஒருவர் தம் மகள் இறந்த பின் அவள் எலும்பை ஒரு குடத்தில் இட்டு வைத்திருந்தார். அவர் ஞானசம்பந்தர் வரின் அவர் தம் அருள் நோக்கால் எலும்பையும் பெண்ணுக்கக்கூடும் என்று திட்டமாக நம்பியிருந்தார். நம்பிக்கைதானே நாகரிகத்தின் அடிப்படை? அச்சிவநேசர் தம் நம்பிக்கையும் வீண்போகவில்லை. சம்பந்தரும் வந்தார். சிவநேசரும் தம் மகளது எலும்பிருந்த குடத்தை அவர்முன் கொண்டு வந்து வைத்தார். அவரும் கபாலியின் அருளை நினைந்தார்; சித்தத்தைச் சிவமாக்கினர். உள்ளம் திறந்தது. உற்ற சொற்கள் பாட்டாக உருப்பெற்று ஒன்றன்பின் ஒன்ருக எழுந்தன. அம்மயிலைப்பதிகத்தே அவர் மறைந்த பெண்ணுகிய அப்பூம்பாவையை நோக்கி, 'மயிலையில்

நடைபெறும் விழாக்களையெல்லாம் காணுமல் செல்லும் நிலை இரங்கத்தக்கது!' என்று பாடுகின்ருர். அவற்றுள் ஒரு பாடல் இது:

**'மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்**
**கைப்பயந்த நீற்ருன் கபாலீச் சரமமர்ந்தான்**
**ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்**
**துய்ப்பனவும் காணுதே போதியோ பூம்பாவாய்!'**

இப்பாடலுள் அப்பூம்பாவை என்னும் மங்கை நல்லாள் கபாலீச்சரம் அமர்ந்த இறைவரது ஐப்பசி மாத ஓணவிழாவினைக் காணுது செல்லும் நிலையைக் காட்டுகின்ருர் சம்பந்தர். அவ்விழா அனைவரும் கலந்து உண்ணும் பெருவிழாவாக அமைந்தது போலும்! அந்தக் கலந்துண்ணும் நல்லவரை அருந்தவர் என்கின்ருர் சம்பந்தர். ஆம்! இன்றும் மலையாளநாட்டு ஓணவிழா, பயிரிட்ட உணவு கொண்டு உண்டாகும் ஒரு விழாவாகத்தானே காண்கின்றது? இரண்டிற்கும் ஒரே ஒரு வேறு பாட்டைத்தான் காண்கின்ரேம். இவர்கள் விழா ஆவணியில் வருகின்றது. ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் அது ஐப்பசியில் வந்தது. இரண்டிற்கும் இடையிடு இரண்டு மாதங்கள். ஆண்டையும் திங்களையும் நாட்களையும் கணக்கிடும் வகையில் இந்த மாறுபாடு ஒருவேளை அமைந்திருக்கலாம்.

தமிழ் நாட்டில் சைவவைணவராகிய இரு சமயத்தவரும் இவ்விழாவினைக் கொண்டாடிய சிறப்பினில் சைவர் கொண்டாட்டத்தை மயிலையில் கண்டோம். அதே மயிலையில் கபாலீச்சரம் இன்றும் இருக்கிறது. ஆனல், ஓண விழாதான் அங்கு நடை

பெறுவதைக் காணவில்லை. தமிழ் நாட்டவர் பல நல்ல பழக்க வழக்கங்களைத் தம் உற்ற சகோதரர்களாகிய மலையாளிகளிடம் ஒப்படைத்துவிட்டார்கள். இங்கு வழக்கத்தில் இல்லாத பல நல்ல தமிழ்ச் சொற்கள் இன்றும் மலையாள நாட்டு வழக்கத்தில் இருப்பதைக் காணலாம். திருவாதிரை விழாவும் இன்று அங்குச் சிறப்பாகப் போற்றப்படுகின்றது. எனவே, தமிழர்தம் ஓண விழாவாக ஒரு காலத்திருந்த இந்த விழா, இன்று தமிழரால் கைவிடப் பட்டாலும், மலையாளிகளால் பொன்னேபோலப் போற்றப்படுகின்றது.

ஓணம் இருபத்தேழு நட்சத்திரங்களுள் இருபத்திரண்டாவது. அதற்குச் சிறப்பு எப்படி வந்தது? வைணவர் அந்நாளில் திருமால் பிறந்தார் என்று கூறுவர். பெரியாழ்வார் திருமால் பிறந்த நாளைக் குறித்து, 'நீ பிறந்த திருவோணம்' என்று பாடுகின்றார். எனவே, திருமால் பிறந்த நாளைக் கொண்டாடல் வைணவர்களுக்கு இயல்புதானே? தேவாரத்திலும் திருமாலைக் குறிக்க 'ஓணப்பிரான்' என்னும் தொடர் வருகிறது. 'ஓணப்பிரானும் ஒளிர்மாமலர் உத்தமனும்' என்பது தேவாரம். நாலாயிரத்தில் திருமாலைக் குறித்துச் செய்யும் ஓண விழாவில் பல்வேறு ஒலிகள் நிறைந்திருந்தன என்ற குறிப்பும் காண்கின்றோம். 'ஓண விழாவில் ஒலியதிர' என்பது அது. பத்துப் பாட்டில் ஒன்றாகிய மதுரைக் காஞ்சியிலும் ஓணம் திருமாலுக்கு உரிய நாளாகப் பேசப்படுகின்றது. இவ்வாறு தமிழ் நாட்டில் வாழ்ந்த சைவவைணவராகிய இரு சமயத்தவர்களுக்கும் பெருவிழாவாக அமைந்தது இவ்வோண விழா.

இன்னும் ஓணம் என்ற சொல்லுக்கு ஆறு என்ற பொருளும் உண்டு. 'கங்கையாதி ஓணநீர்' என்று சேது புராணம் குறிக்கின்றது. இவ்வோண நன்னாளில் மக்கள் புனித தீர்த்தங்களில் நீராடிச் சிவனையோ விஷ்ணுவையோ வழிபடுவார்கள் போலும்! மக்களது புறத்தூய்மை நீராலும் அகத் தூய்மை வாய்மை நிறைந்த வழிபாட்டாலும் நடை பெறும் ஒரு நல்ல விழாவே ஓண விழா என்பது துணிபு. ஆம்! இத்தகைய சிறந்த விழா இன்று தமிழரால் கைவிடப்பட்டது. எனினும், மலையாளி கள் சிறக்கப் போற்றுகின்றார்கள். அவர்கள் போற் றும் விதத்தை இனிக் காண்போம்:

மலையாள நாட்டில் இவ்வோண விழா ஒரு சம யச் சார்பான விழாவாகக் கொண்டாடப்படுவதன்று; நாட்டு விழாவாக அமைகின்றது. சாதி மத வேறு பாடற்று அனைவரும் இவ்விழாவில் பங்கு கொள்ளு கின்றனர். சைவ வைணவத் தொடர்போடு இவ் விழா இங்குப் பண்டை நாட்களில் போற்றப்படினும், மலையாளிகள் சமயத் தொடர்பற்ற ஒரு பெருவிழா வாகவே இதைப் ;போற்றுகின்றார்கள். ஓணநாள் அவர்களுக்குச் சிம்ம மாதத்தில்—அதாவது ஆவணி யில்—திருவோண நட்சத்திர நாளாய் அமைகின் றது. அன்று பெரும்பாலும் நிறைமதியும் கூடி யிருக்கும். பெருஞ்செல்வர் இவ்விழாவை இருபத் தைந்து நாட்கள் கொண்டாடுவார்கள். ஆவணித் திருவோணத்துக்கு முன் பத்து நாட்களிலும், பின் பதினைந்து நாட்களிலும் இவ்விழா நடைபெறும். ஆவணித் திருவோணத்துக்கு முன் வரும் ஹஸ்த நட்சத்திரம் தொடங்கி, அடுத்த மக நட்சத்திரம் வரையில் இருபத்தைந்து நாட்கள் இவ்விழா நடை

பெறும். இக்காலத்திலே செல்வர் தம் சுற்றமும் பிறரும் உடனிருந்து உண்டு களிக்க மகிழ்வார்கள். 'ஓண விழாவும் அருந்தவர்கள் துய்ப்பனவும் காண' வேண்டுமென்று சம்பந்தர் கூறியது இச்சிறப்பைத் தான்போலும்!

செல்வர்கள் 25 நாட்கள் கொண்டாட, சாதாரண மக்களும் ஏழைகளும் திருவோணத்திலும் அதற்கு முன்னும் பின்னும் இவ்விரண்டு நாட்களிலும் — ஆறு நாட்களில் — இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர். அவற்றிலெல்லாம் சிகரமாகத் திகழும் நாள் திருவோண நாளேயாம்.

இவ்விழாவைப்பற்றி அந்நாட்டில் வழங்கும் கதை ஒன்றுண்டு: மலை நாட்டை மாபலிச் சக்கரவர்த்தி ஆண்டதாகவும், திருமால் அவரிடம் வாமனனாய் வந்து மூவடி மண் யாசித்ததாகவும், இரண்டடியால் பூமியையும் வானத்தையும் அளந்து மூன்றாவது அடியால் மாபலியை நாக உலகுக்குத் தம் அடியை முடிமேல் வைத்து அனுப்பியதாகவும் கதை வழங்குகின்றது. மாபலி அவ்வாறு நாக உலகம் அனுப்பப்பெறும்போது, திருமாலை நோக்கி, ஆண்டுக்கொரு நாள் தாம் தம் நாட்டை வந்து காண வரந்தர வேண்டுமென்று கேட்க, திருமால் அவ்வரத்தைத் தந்தாராம். அவர் வந்து காணும் நாளே இந்த ஓண நாள். தம்மை ஆண்ட நல்லரசனை மாந்தர் இன்முகமும் பிறவும் கொண்டு வரவேற்பதே ஓண விழாவாகும். அன்று திருமால் வந்து அருள் புரிந்த நாளைத்தான் போலும் தமிழர்கள் 'மாயோன் மேய ஓண நன்னாள்' என்று கூறிப் போந்தார்கள்!

மேற்கண்ட வரலாறு வைணவ சம்பந்தமான தாயினும், சிவ சம்பந்தமான வரலாறும் ஒன்றுண்டு: மாபலி ஆண்டகாலத்து அவன் தலைநகராகிய 'திரிகாகரா' என்ற பெருநகரில் அவன் சிவபிரானுக்கு ஆண்டுக்கொரு பெருவிழாச் செய்தான். அந்நகர் இன்று வடதிருவாங்கூர்ப் பகுதியில் உள்ளது. அத்திருவிழாவினைக் காண ஆண்டுதோறும் மலைநாட்டு மக்கள் அனைவரும் திரள் திரளாகச் செல்வார்களாம். காலப்போக்கில் அனைவரும் ஓரிடத்தில் வந்து சேர்வதென்பது கடினமாகத் தோன்ற, மாபலி தம் மக்களை அவரவர் இல்லத்திலேயே 'திரிகாகரா அப்பன்' உருவம் அமைத்து, வழிபட ஆணையிட்டனராம். அவர்களும் அவ்வாறே தத்தம் இல்லத்தில் பூத கணங்கள் புடைசூழ இருக்கும் திரிகாகரா அப்பன் திருவுரு அமைத்து, அன்று முதல் இன்றுவரை வழிபட்டு வருகிறார்களாம். மலைநாட்டு மகளிர் இந்த ஓண விழா ஒன்றிலேதான் தத்தம் வீட்டு வாயில்களில் அரிசி மாவினல் கோலமிட்டு அழகு செய்வார்களாம்.

தமிழ் நாட்டு இலக்கியச் சான்றுகளுக்கு ஒப்ப, சைவ வைணவச் சார்போடு அவ்வோணம் அமையினும், அது வெறுஞ் சமயவிழாவாய் அமையாது, நாட்டு விழாவாய் அமைந்துள்ளது என்று மேலே கூறினேம். ஆம்! அவ்விழா, சமய விழாவாக அன்றி, உழவர் விழாவாகவும் காட்சி தருகின்றது. தென் மேற்குப் பருவம் தந்த கோடை மழையால் நிலம் திருத்திப் பயிரிடப் பெற்ற முதற்பயிரின் அறுவடைக் காலம் அது. அறுவடையில் பெற்ற பொருள் கொண்டு நாட்டில் பசியும் பிணியும் பகையும் நீங்க அனைவரையும் சேர்த்து வைத்து விருந்தளிக்கும் விழாவே இவ்வோணம்.

இவ்விழாவில் மலையாளிகள் புத்தாடை புனைவார்கள். 'நேந்திரப்பாயசம்' என்ற வகையில் அவர் தம் நாட்டுத் தனி விளைவின் உடைமையாகிய வாழைக்காயின்பலனைத் துய்ப்பார்கள். செல்வர்கள் ஏழைகளுக்கு உடையும் உணவும் கொடுத்துச் சிறப்புச் செய்வார்கள். ஏழைகள் தத்தம் வயலிலும் சோலையிலும் விளைந்த பழம் முதலியவற்றைக் கையுறையாகக் கொண்டு தந்து செல்வரை வணங்குவர். பெண்கள் ஆடியும் பாடியும் மகிழ்வார்கள். இளஞ்சிறுவர் பறை முழக்கி, மலர் பறித்துச் சிவ உருவத்தின்மேலிட்டு மகிழ்வர். வீரர்கள் 'ஓணத்தாலு' போன்ற பல பல விளையாடல்களைச் செய்வர். மலையாள ஆண்டு இன்று 1129. இவ்வாண்டின் தொடக்க நாளே ஓண நாளாய் அமைகின்றது. ஆம்! இவை அனைத்தையும் எண்ணித்தான் போலும், ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்ச் சம்பந்தர்,

**'ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்**
**துய்ப்பனவும் காணுதே போதியோ பூம்பாவாய் !'**

என்று பூங்கோதையைக் கண்டு இரங்கிக் கூறி இவ்விழாவின் ஏற்றத்தைச் சிறப்பித்தார்!

இவ்வாறு ஒருகால் தமிழ்நாட்டின் சிறந்த விழாவாக ஓணம் அமைந்திருந்தபோதிலும், அதன் அடிச்சுவடுகளை அறியாமல் தமிழர் கைவிட்டுவிட, அவர் தம் சகோதரர்களாகிய மலையாளிகள் அவ்விழாவைத் தம் விழாக்களிலெல்லாம் தலை சான்ற விழாவாகக் கொண்டாடும் நிலையினை எண்ணத்தான் வேண்டும். தமிழர் எத்தனையோ பழக்க வழக்கங்களைக் கைவிட்டு விட்டனர். அவற்றுள் பெரும்பாலன இன்றும் மலையாள மக்களால் போற்றப்படுகின்றன. மலை

நாடு தமிழ் நாடாய் இருந்தமை கண்கூடு. ஒரு சில நூற்றுண்டுகட்கு முன்னர் அங்கு வழங்கிய மொழி தமிழ்தானே? எத்தனைத் தமிழ்ப் பெரும்புலவர் அம்மலை நாட்டில் வாழ்ந்து, செந்தமிழை ஓம்பி வந்தனர்! இன்று அத்தகைய தமிழ்ப்புலவர் இல்லாவிடினும், அங்கு வாழ்கின்ற மலையாள மக்கள் தமிழர் பழக்க வழக்கங்களை மறவாது ஓம்பும் நிலை கண்டு, 'அவர்தம் விழாக்கள் சிறக்க!' என வாழ்த்துகின்றேன்! வாழ்க ஓண விழா!

# கலை மகள் விழா ★ ★

நவராத்திரி என்பதும், தசரா என்பதும் தமிழர்களுக்குப் புதிய சொற்களல்ல! புரட்டாசி மாதத்தில் அமாவாசையைத் தொடர்ந்து வருகின்ற அடுத்த ஒன்பது நாட்களையே இவ்வாறு நவராத்திரி என்ற பெயரால் வழங்குவர். மற்ற இரவுகளுக்கு இல்லாத ஒரு புதுமை இவைகளுக்கு என்ன ஏற்பட்டுவிட்டது? அவைகள் ஆற்ருத ஒன்றை இவை என்ன சாதிக்கின்றன? ஒன்றுமில்லை. ஆனல், அக்காலத்தில் நாட்டில் நடைபெறுகின்ற கொண்டாட்டங்களைக் காணின், அக்காலம் ஏதோ குதூகலம் நிறைந்த காலமாகவே தோன்றும் என்பது உறுதி.

தமிழ் நாட்டில் மட்டுமன்றி, மைசூரிலும் வங்காளம் முதலிய வடநாட்டுப் பகுதிகளிலுங்கூட இத்தசராக் கொண்டாட்டம் சிறப்புற நடைபெறுவதை அறியாதார் யார்? அந்த நாடு முழுவதும் எங்கும் 'விளக்கொளி'.—எந்நாட்டிலிருந்தும் பலர்

அந்த நாட்களில் மைசூரில் வந்து கூடி விழாவில் கலந்துகொள்வர். அந்த ஒன்பது நாட்களிலும் மைசூர் உண்மையில் ஒரு பேரொளி நகரமாய்க் காட்சியளிக்கும். தெய்வ உலகமோ என்று பலரும் ஐயுறும் வண்ணம் அவ்வூர் தோன்றும். கண்ணம் பாடி அணைக்கட்டுக்கு இட்ட பிருந்தாவனம், கண்ணனது உண்மைப் பிருந்தாவனத்தையும் தோற்கடிக்கும் வகையில் தோற்றமளிக்கும். இத்தனையும் எதற்காக நடைபெறுகின்றன? அங்குள்ள மலைமேல் எழுந்தருளியிருக்கும் சாமுண்டீஸ்வரியைக் குறித்துக் கொண்டாடும் விழாவாகவே அது அமைகின்றது. அத்தெய்வத்திற்கு மைசூர் அரசகுடும்பத்தார் அந்த நாட்களில் பெருஞ்சிறப்புச் செய்து போற்றுவர். எனவே, அப்பெண் தெய்வத்தைக் குறித்து நடைபெறும் விழாவாக நவராத்திரி அமைகின்றது.

வங்காள நாட்டுத் தலைநகராகிய கல்கத்தாவில் அமைந்த காளிக்கும் அந்த ஒன்பது நாட்களில் பெருவிழா நடைபெறுகின்றதாம். இராமகிருஷ்ணர் போன்ற ஞானியர்களுக்கு அருள் ஞானம் பெய்து கொடுத்த அந்தப் பெருந்தெய்வத்திற்கு வழிபாடாற்றும் அந்த ஒன்பது நாட்களிலும் கல்கத்தா நகரம் சிறந்து விளங்குமாம். எனவே, அங்கும் காளி என்னும் பெண் தெய்வத்திற்குச் சிறப்பொடு பூசனை செய்யும் விழாவாகவே இந் நவராத்திரி விழா அமைகின்றது.

தமிழ் நாட்டில் உள்ள கோயில்தோறும் இவ் விழாக் கொண்டாடப் பெறுகின்றது. பெண் தெய்வத்தை முன்னிறுத்தி வழிபாடாற்றும் விழா

வாகவே இதை அனைவரும் கொண்டாடுகின்றார்கள். எனவே, இவ்விழாவுக்கும் பெண் தெய்வத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது தேற்றம். இதுபற்றிப் புராண வரலாறும் உண்டு. இறைவன் பக்கத்தில் அமர்ந்து அருள் புரியும் பார்வதியைப் பற்றிய கதை அது. நாம் கதையை விட்டு, மேலே விழாவினைப் பற்றிக் காண்போம்.

தமிழ் நாட்டு மக்கள் பெண்களை அடிமைப் படுத்தி வைத்திருப்பார்கள் என்பர். ஆனால், அவர்தம் வழிபாட்டு முறையினைக் கண்டால், அவர்கள் பெண்களுக்குத் தந்த ஏற்றம் விளங்காமற் போகாது. எல்லாவற்றையும் அவர்கள் பெண் உருவிலே கண்டார்கள். வளம் பெருக்கி விளைவளிக்கும் மண்ணை 'நிலமகள்' என்றார்கள்; செல்வத்தைத் 'திருமகள்' என்றார்கள். கல்வியைக் 'கலை மகள்' என்றார்கள். இப்படியே எல்லாவற்றையும் பெண் தன்மையில் வைத்துப் பாராட்டிப் பேசும் இந்த நிலையில் அவர்கள் பெண்களுக்கு ஏற்றம் தந்தே போற்றினார்கள்.

இந்தத் தசரா அல்லது நவராத்திரி விழாவும் பெண் தெய்வ வழிபாடு என்பதைப் பார்த்தோம். புரட்டாசி அமாவாசை கழித்த மறுநாள் அப்பெண் தெய்வத்தைத் தனியிடத்து நிறுத்தி, அதைத் தவம்புரிகோலத்தில் நிற்கவைத்து, அந்தத் தவ நெறிக்கு ஏற்ப வழிபாடாற்றுவர். மக்கள் ஒன்பது நாட்கள் தொடர்ந்து வழிபாடாற்றிய பின் அச் சிறப்பின் உச்சநிலை இறுதி நாளில் வருகின்றது. அன்று எல்லாப் பொருளும் ஓய்வு பெறும். உழைக்கப் பயன்படும் அத்துணைக் கருவிகளும்

ஓய்வுபெற்றுச் சிறப்பில் கலந்துகொள்ளும். பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்கும் அன்று பெருநாளே. அவர்கள் அன்று படிக்க வேண்டுவதில்லை. அவர்கள் தங்கள் நூல்களையெல்லாம் அடுக்கி வைத்து வழிபாடாற்றுவர். எல்லாப் பொருளுக்கும் வழிபாடு ஆற்றப் பெறினும், சிறப்பாக அறிவு நலம் தரும் நூல்களே இவ்விழாவில் முதல் இடம் பெறுகின்றமையால், இவ்விழாவைக் 'கலை மகள்' விழா என்று வழங்கினர் போலும்! புராணத்திலே, தவமிருந்த அம்மை அந்த இறுதி நாளிலே தவம்கலைந்து உலகை அழித்து நின்ற ஓர் அரக்கனைக் கொன்றதாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வரக்கன் அறியாமை என்னும் அரக்கனாய் இருக்கலாம். அறியாமையைப் போக்கி அறிவொளியைப் பரப்பும் விழாவாய் இருக்கின்றமையினாலேதான் போலும் மைசூர் மக்கள் இவ் விழாவை விளக்கீட்டு விழாவாகப் போற்றி நாட்டில் நல்ஒளி பரப்பிப் புரக்கின்றார்கள்!

கலை மகள் விழா என்பது என்ன? கலை மகள் மக்கள் தோற்றத்தில் இருப்பவள் அல்லள்தான். அறிவு கலை மகள் வடிவம். அழகு கலை மகள் தோற்றம். அன்பே கலை மகள் நிலைக்களன். இப்படி அமைந்த கலைமகளுக்குப் பின்னர் அடியவர் உருவம் கற்பித்தனர். இரவிவர்மர் அக்கற்பனைகளை நிலைக்களனாகக் கொண்டு, நிறம் குழைத்து ஓர் உருவைச் செம்மையாகத் தீட்டியிருக்கின்றார். அந்தப்படம் இந்து மக்கள் இல்லந்தோறும் இடம் பெற்றிருப்பதை அறியாதார் யார்!

அறிஞர் கலை மகளை வெறும் படத்தில் மட்டும் காணவில்லை. எங்கெங்குக் கலை மணக்கின்றதோ,

அங்கங்கே கலை மகளைக் கண்டார்கள் அறிஞர்கள். கல்வியும் அறிவும், அவற்ருேடு இயைந்த பிற நலன் களும் சிறக்கும் இடங்களிளெல்லாம் கலை மகள் உருவம் அவர் கண்முன் தோன்றும். ஆகவே, கலை மகள், கல்விக்களஞ்சியம், அறிவின் ஊற்று என்ற வகையிலே அவளைக்கண்டு, அந்தநோக்கத்தி லேயே விழாவினையும் ஆற்றி வந்தார்கள்.

கலை மகளைக் கண்ட அறிஞர் பலர். அவளது அறிவாற்றலை வியந்து போற்றிய அறவோர் பலர். அண்மையில் நம்மிடை வாழ்ந்து மறைந்த அண்ணல் பாரதியார் அக்கலை மகளின் இருப்பிடத்தைப் பல படியாகப் போற்றுகின்ருர்:

“மாதர் தீங்குரல் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்
கோத கன்ற தொழில்உடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்ருள்
இன்ப மேவடி வாகிடப் பெற்ருள்.”

என்று அவர் கலை மகளை மக்கள் முன் கொண்டு வந்து காட்டுகின்ருர். ஆம்! கலைமகள் இனிய பெண் கள் குரல் ஓசையில், மக்கள் மழலை மொழிகளில், குயி லின் பாட்டில், கிளியின் இன்சொல்லில் இனிமை யாகக் காட்சி அளிப்பதை அவர் கண்டு கண்டு பற்றவருக்கும் காட்டுகின்ருர். மேலும், எங்கெங்கு அழகு விளங்குகின்றதோ, அங்கங்கெல்லாம் அவள் தோற்றம் விளக்கமாக அவருக்குத் துலங்குகின்றது. அவள் வடிவத்தை இன்பமாகவே கண்டு துய்க்

கின்றார். அவர் இவற்கைப்பொருள்களோடு ஒன்றி அவற்றின் அழகில் திளைத்து ஆனந்தப் பாட்டிசைத்தவ ரல்லரோ! அந்த நிலையில் கலை மகளை அழகோவியமாகக் கண்டதில் வியப்பில்லையல்லவா!

அக்கலைமகளைக் காட்டிய பாரதியார், அதே மூச்சில் அவளுக்கு ஆற்ற வேண்டிய வழிபாட்டையும் குறிக்கின்றார். நாம் மேலே கண்ட நவராத்திரி, சரஸ்வதிபூசை ஆகியவற்றை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்? இன்று அவ்விழாக்களில் வெறும்பொம்மைக் கொலுத்தானே காட்சி தருகின்றது? பொம்மைகளுக்குத்தாம் அந்த மாதத்தில் எவ்வளவு கொண்டாட்டம்! குழந்தைகளுக்கு—சிறப்பாகப் பெண்குழந்தைகளுக்கு—இவ்விழா என்றால் ஒரே மகிழ்ச்சி. ஏன், பள்ளிகளிற் கூடங்களில் கூட இவ்விழாவைக் கொண்டாடத் ‘தசரா’ விடுமுறை தருகின்றார்களே! நம் சென்னை அரசாங்கத்தார் கூட, கடந்த சில ஆண்டுகளாக இத்தசராவுக்கு அதிக விடுமுறை நாட்களைத் தருகின்றார்களே! ஆகா! இந்த விடுமுறை நாட்களிலே தான் குழந்தைகள் என்னென்ன கேட்கிறார்கள்!

செல்வரும் வறியரும் தத்தம் நிலைமைக்கேற்பப் பொம்மைகளை வரிசையாக அடுக்கி அழகுபடுத்துகின்றனர், மாவிலைத் தோரணமும் வாழையும் கமுகும் கட்டி வீடுகளை அலங்கரிக்கின்றனர். பெற்றோர் தம் குழந்தைகளைப் பட்டாலும் பொன்னாலும் அழகு செய்கின்றனர். குழந்தைகளும் பெரியவர்களும் வீடு வீடாகச் சென்று, தத்தம் வீட்டில் கொலு வைத்திருக்கும் அழகினை வந்து பார்க்கச் சுற்றத்தினரையும் நண்பரையும் அழைக்கின்றார்கள்.

சில வீடுகள் திருமணவீடுகளோ என்னுமாறு காட்சி அளிப்பதை யாரே அறியாதார்! இவ்வாறு உற்ருர் உறவினரையும் மற்ருரையும் அவ்வேடிக்கைப் பொம்மை வரிசையைக் காணுமாறு அழைக்கும் காட்சி நமக்கு எதை நினைவூட்டுகின்றது? பல்வேறு விழாக்களில் நாம் பார்த்த அந்த ஒரே அடிப் படைக்கு நம்மை ஈர்த்துச் செல்லுகின்றது.

விழா என்ருல் மக்கள் வாழ்வை வளம்படுத்து வது என்பதுதானே பொருள்? செல்வரும் வறியரும் வேறுபாடு இல்லாத ஒன்றை நினைவூட்டுவதுதானே விழா? பெற்றது கொண்டு சுற்றம் அருத்தும் பண் பாடே விழாவின் அடிப்படை. நாட்டில் பசியும், பிணியும், பகையும் நீங்குவதே விழாவின் குறிக் கோள் என்பதைக் கண்டோம். அதேதான் இந்த விழாவின் அடிப்படையாகவும் அமைகின்றது. பொம்மைக் காட்சியாயினும், கதிரவன் காட்சியாயி னும், விளக்கீட்டு விழாவாயினும், அன்றிக் கடவுளர் காட்சி நல்கும் பெருவிழாவாயினும் தமிழர் கொண் டாடும் அந்த எல்லா விழாக்களின் அடிப்படையும் ஒன்றேதான். அதுதான்,

'பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி'

அதைச் செயலிலும் மேற்கொண்டு, அனைவரையும் ஒன்று சேர்த்து வைப்பது. இந்த அடிப்படையை இக்கலைமகள் விழாவில் பங்கு கொள்ளும் அனைவரும் அறிவர். மக்கள் வீட்டுக்கு வருவோரை இன்முகம் காட்டி அழைக்கும் காட்சி இவ்வுண்மையை உணர்த் தாமற்போகாது.

இனி மேலே செல்வோம். நவராத்திரி ஒன்பது நாட்களிலும் இவ்வாறு வீட்டில் பொம்மைகளையும், கோயிலில் தெய்வத்தையும் 'கொலு' நிறுத்தும் மக்கள், இறுதி நாளில் கலைமகள் விழாவினைக்கொண்டாடுகிறார்கள். அன்றுதான் மேற்சொன்ன வகையில் அனைத்தையும் அடுக்கியும் வரிசைப்படுத்தியும் வைப்பார்கள். அவற்றிற்கு மஞ்சளும் குங்குமமும் இட்டு மலர் சூட்டுவர். பின் பல் வகைப் பண்டங்கள் செய்து வைத்து வழிபடுவார்கள். அடுத்து சுற்றத்தோடு கலந்து உண்பார்கள். பின் விழா முடிவுறும்.

இந்த வகையில் விழாக் கொண்டாடுவது ஒரு வகையில் சிறந்ததுதான். நல்ல உணவு செய்து, சுற்றத்தாருடன் கலந்து விழாக் கொண்டாடல் தமிழ் நாட்டில் நடைபெறுவதுதான். ஆனால், அத்துடன் விழா முடிந்துவிட்டது என்று எண்ணினால் தவறு நேர்கின்றது. கலை மகளை இந்த வகையில் கொண்டாடுதல் தவறு என்று சொல்லவில்லை. நன்றாகக் கொண்டாடட்டும். ஆனால், இந்த விழாவின் அடிப்படையை மறந்துவிடுகின்றோமே! கலைமகள் கல்விக்கு அடிப்படையானவள். அக்கல்வியை மக்களுக்கு அளிப்பதுதான் கலைமகள் விழா. நாட்டில் எல்லாரும் கற்றவராகக் கங்கணம் கட்டிக் கொள்ளுதலே இந்த விழாவின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

நம் நாட்டில் விழா ஆற்றுவது போல, உலகில் வேறு எந்த நாட்டிலும் இவ்விழா ஆற்றப்படவில்லை. ஆம்! அப்படியிருந்தும், நம் நாட்டில் கற்றவர் மிகக்குறைவே. கலை மகளைத் தெய்வமாக்கி விழாக் கொண்டாடா நாடுகளிலெல்லாம் நூற்றுக்கு

எண்பது பேருக்குமேல் படித்தவர் இருக்க, கலை மகளைத் தெய்வமாகப் போற்றி விழாக்கொண்டாடும் நம் நாட்டில் நூற்றுக்குப் பதினைந்து பேருக்குமேல் கற்றவர் இல்லை என்பது எதனால் நேர்கின்றது? ஆம்! அடிப்படையை மறந்ததனாலேதான். நாட்டில் உள்ள ஏழை எளியவர்களுக்கு எழுத்துக் கற்றுக் கொடுத்தலே கலைமகள் விழா. ஊர்தோறும் பள்ளிக்கூடங்கள் உண்டாக்குவதே கலைமகள் விழா. அறியாமையைப் போக்கி, அறிவை வளர்ப்பதே கலைமகள் விழா. எல்லாருக்கும் வாக்குரிமை உள்ள இந்த நாளில் அனைவரையும் கற்றவராக்கும் கலைக் கழகங்கள் நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் உண்டாக வேண்டும். அதை விடுத்து வெறு மந்திரத்தைச் சொல்லி மலரிட்டு அடுக்கிய நூல்களை அர்ச்சித்தால் அது உண்மையில் கலைமகள் விழாவாகாது. இதையேபாரதியார்,

‘செந்த மிழ்மணி நாட்டிடை உள்ளீர்!
சேர்ந்துஇத் தேவை வணங்குவம் வாரீர்.
வந்த னம்இவட் கேசெய்வ தென்றால்
வாழி! அஃதுஇங்கு எளிதன்று கண்டீர்!
மந்தி ரத்தை முணுமுணுத்து ஏட்டை
வரிசை யாக நிறுத்தி அதன்மேல்
சந்த னத்தை மலரை இறைத்தல்
சாத்தி ரம்இவள் பூசனை அன்றாம்.’

என்று சற்று வன்மையாகவே கண்டிக்கிறார். ஆனால், அவர் கண்டிப்புச் சில இன்றைய அரசியல் தலைவர்களைப் போன்று வெறுங்கண்டித்தலோடு மட்டும் நின்றுவிடவில்லை. அது வேண்டா என்றால் வேறு செய்ய வேண்டுவது என்ன என்பதைத் தடுக்கிறவர்கள் உணர்த்துவதுதானே விவே

கம்? நாட்டில் பலர் இன்று அதைச் செய்வதில்லை. 'இது தவறு; இது வேண்டா; அது தவறு; அது வேண்டா,' என்று கூறும் பலரும், வேண்டா ததை நீக்கி, வேறு எப்படித் தொழிற்படவேண்டு மென்று ஆக்கப் பணிக்கு வழி காட்ட மாட்டார்கள். ஆனால், பாரதியார் அவ்வாறு விட்டுவிடவில்லை. இந்த வெறும்பூசையை வேண்டா என்ற பாரதியார், வேறு என்ன செய்ய வேண்டும் என்று மூச்சொடு மூச்சாகப் பாடிக் காட்டுகின்றார்.

'வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வி இலாததோர் ஊரைத்
தீயி னுக்குஇரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.'

என்று திட்டமாக வழிகள் இவை இவை என்று எடுத்துக்காட்டுகின்றார். ஆம்! 'வீடெல்லாம் கலை மணம் கமழுமாறு அனைவரும் படித்திருக்க வேண் டும். தெருவுக்கு ஒரு பள்ளியாவது கட்டாயம் இருக்க வேண்டும். நகரங்களிலே நிரம்பப் பள்ளிகள் தேவை' என்று ஆக்கப்பணிக்கு வழி காட்டிய பாரதி யார், அப்படியும் அவர் ஆசைப்படி பள்ளிக்கூடம் அமைக்க ஓர் ஊர் முன் வரவில்லையானல் அந்த ஊரைச்சுட்டுப் பொசுக்கவேண்டும் என்று கூறுகின் ருர். உண்மைதான்! அறியாமை வயப்பட்டு, விலங் கினும் கேடாக, ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்த் தாழ்ந்து, தமக்கும் தம் நாட்டுக்கும்

அவச்சொல்லை உண்டாக்கிக்கொண்டு உலுத்தராய் வாழ்வதைக்காட்டிலும், அவர்களும், அவர் வாழும் ஊரும் அழிந்தொழிதல் எவ்வளவோ மேல்தானே? அந்த ஊர் நீங்கினல் நாட்டின் மற்றைப்பகுதியாவது நல்ல பெயரும் புகழும் பெற்று அறிவு விளக்கமுற்று வாழும் அல்லவா?

இவ்வளவு ஆத்திரத்தோடு கூறினலும், பாரதியாருக்கு ஊரையெல்லாம் அழிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. 'பகைவனுக்கருள்வாய்' என்று பாட்டிசைக்கும் அவர் நெஞ்சம், இக்கொடிய செயலுக்கு இடம் தருமா? தாராது: எனினும், நாட்டில் கலைமகளுக்கு விழாவினைக் கொண்டாடிக்கொண்டே, அக்கலைமக ளின் வாழ்வாகிய அறிவைக் குழி தோண்டிப் புதைக்கும் நிலை கண்டு அவர் நெஞ்சம் குமுறுகின்றது! அவ்வளவுதான்! இன்றைய அரசாங்கத்தார் அவர் எண்ணத்தை ஓரளவு நிறைவேற்றும் வகையில் புத்தம்புதிய பள்ளிகளை ஆண்டுதோறும் உண்டாக்கிக்கொண்டே வருகின்ருர்கள். இன்னும் சில ஆண்டுகளில் இளம்பிள்ளைகள் அனைவரையும் கட்டாயமாகப் படிக்கவைத்து, எல்லாரையும் அறிவுடையவராக்கத் திட்டங்களும் முன்னிற்கின்றன. எப்படியோ பாரதியார் ஆசை நிறவேறவேண்டும் என்பதுதான் நம் ஆசையும்:

அந்தக் கலைமகள் விழாவாகிய ஆக்கப் பணிக்கு நாட்டில் உள்ள அனைவரையும் அழைக்கின்ருர் பாரதியார். செல்வரும் வறியரும் ஆடவரும் பெண்டிரும் அனைவரும் கலந்து வீட்டில் விழா ஆற்றுவது போன்று, பொது வீடாகிய நாட்டிலும் கலந்து விழாவாற்ற விழைகின்ருர் பாரதியார்:

‘நிதிமி குத்தவர் பொற்குவை தாரீர்;
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்;
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்;
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்;
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக்கு உரியன பேசீர்;
எதுவும் நல்கிஇங்கு எவ்வகை யானும்
இப்பெ ருந்தொழில் நாட்டுவம் வாரீர்!’

என்று அவர் உள்ளம் வழிந்து உதட்டில் பாட்டாக வருகின்றது. உயிரையும் பிறிது எதையும் கொடுத்தாகிலும் நாட்டில் கல்வியைப் பரப்ப வேண்டும் என்பதை இறுதி அடிகளில் எவ்வாறு திட்டமாகக் காட்டுகின்றார்! நாமும் அவரைப் பின்பற்றிக் கலைமகள் விழாவினைக் கொண்டாடின், நாட்டில் கல்வி விளக்கமுறும்; விழாவின் பலனும் கைகூடும். அப்பணிக்கு இக்கலைமகள் விழாநாளிலே வருக என அனைவரையும் அழைக்கின்றேன்.

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இன்று நவநாகரிகத்தோடு விளங்கும் சென்னை நகர் இல்லை. என்றாலும் திருமயிலையும், திருஒற்றியூரும், திரு அல்லிக்கேணியும் அன்று இன்றைய நிலையைக் காட்டிலும் பொலிவோடும் புகழோடும் விளங்கியிருந்தன. இன்று இவை சென்னையின் அங்கமாய் அமைந்துள்ளன. அன்று சோலையிடையிட்ட தனித் தனிப் பேரூர்களாய் இவை விளங்கியிருக்க வேண்டும். வடக்கே ஒற்றியூரிலும், தெற்கே மயிலையிலும் மக்கள் நன்கு வாழ்ந்து வந்தனர். நாகரிகமும் பண்பாடும் நல்லுள்ளமும் பெற்ற மக்கள், சிறந்த விழாக்கள் பல கொண்டாடி, தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு வாழ்ந்து வந்தார்கள். அவர் தம் ஒழுக்கமும் வாழ்க்கை முறையும், வெறும்பகட்டாக அமையாமல், பாங்கோடு பொருந்தியனவாய் இருந்தன.

அந்த நாட்களில் ஒரு நாள் ஒற்றியூரில் சைவம் வளர்த்த பெரியார் ஞானசம்பந்தர் வந்து தங்கியிருந்தார். அவர் வரவறிந்த மயிலையில் வாழ்ந்த சிவநேசர் என்பார் ஒற்றியூர் சென்று சம்பந்தரைத் தம் ஊருக்கு வருமாறு வேண்டினர். தம் ஒரே மகள் பூம்பாவை என்பாள் விடந்தீண்டப்பெற்று இறந்தாள்; அவளது எலும்பினைத் தமது வீட்டில் ஒரு குடத்தில் வைத்திருந்தார் அவர்; ஞானசம் பந்தரிடம் நீங்காத பத்தி கொண்டிருந்த காரணத்தால், அவர் விரும்பினுல் எலும்பும் பெண்ணுகும் என முடிவு செய்திருந்தார்; அவர் எப்போது வருவார் என எதிர்நோக்கியிருந்தார். ஆம்! ஒற்றியூரில் வந்துள்ளதை அறிந்து, ஓடிச்சென்று, மயிலை வர வேண்டினர்; வேண்டித் தம் கருத்தையும் வெளியிட்டார். சம்பந்தரும் அவர் விருப்பப்படி மயிலை சென்று கபாலியின் முன் நின்றுர். எலும்புக் குடம் கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு பாட்டாகப் பாடி, பதிகம் முடித்து, எலும்பைப் பெண்ணுக்கினர் சம்பந்தர். அவர்தம் பதிகத்தே ‘மயிலையில் நடைபெறும் பல விழாக்களைக் காணுது பூம்பாவை போதல் சரியன்று,’ என்று கூறி எழுந்துவரச் செய்தார். அவற்றுள் ஒரு பாட்டு இது :

**“வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்**
**துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்**
**தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்**
**விளக்கீடு காணுதே போதியோ பூம்பாவாய் !”**

மங்கைமார்கள் சிறப்புறக் கொண்டாடும் இவ விளக்கீட்டு விழாவினைக் கார்த்திகை நாள் விழா எனக் குறிக்கின்றுர் சம்பந்தர். அதுவும் மிக்க பழங்கால முதலே இவ்விழாப் போற்றப்பட்டு வந்த

தென்பதைத் 'தொல் கார்த்திகை நாள்' என்கின்றார். எனவே, கார்த்திகை விளக்கீட்டு விழா, தமிழ் நாட்டின் பழம் பெருந்திருவிழாக்களுள் ஒன்று என்பது புலனாகும்.

தமிழ் நாட்டுப் பழம்பேரிலக்கியமாகிய அகநானூற்றிலே இக்கார்த்திகை விளக்கீட்டைப் பற்றிய குறிப்புக்கள் பல இடங்களில் வருகின்றன. காட்டிடத்தே இலவமலர்கள் மரம் குலுங்கப் பூத்துள்ளன. இலைகள் இல்லை. பூக்கள் செந்நிறம் கொண்டவை. அம்மரத்தில் சிவந்த பூக்கள் அடுக்கடுக்காய் அமைந்துள்ள அந்த இயற்கைக் காட்சி, சங்க கால மூதாட்டியாரான ஔவையாரைக் கார்த்திகைவிளக்கீட்டு விழாவுக்கு அழைத்துச் சென்றது. 'மகிழ்ச்சியால் திளைத்து ஆர்ப்பரித்து விழாக்கொண்டாடும் மகளிர் கார்த்திகை நாளில் ஏற்றி வைத்த விளக்கு வரிசையைப்போன்று இலவமலர்கள் அடுக்கடுக்காய் அமைந்துள்ளன!' என்று பாடுகின்றார் அவர். இதோ அவர் வாக்கு:

'வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
நெருப்புஎனச் சிவந்த உருப்புஅவிர் அம்காட்டு
இலைஇல மலர்ந்த முகைஇல் இலவம்
கலிகொள் ஆயம் மலிபுதொகுபு எடுத்த
அம்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி'

(அகம். 11)

ஔவையார் மட்டுமன்றி, இன்னும் பல புலவர்களும் கார்த்திகை விளக்கீட்டு விழாவைச் சிறப்பித்துள்ளனர். நக்கீரர் கார்த்திகை சேரும் நிறைமதி நாளே அவ்விழாவின் நாளாகக் குறிக்கின்றார். தமிழ் நாட்டில் மாதங்களின் பெயர்களெல்லாம் இவ்வாறு நட்சத்திரங்கள் நிறைமதி சேருவதை

ஒட்டிக் கணக்கிட்டிருப்பதை அறியாதார் யார்? சித்திரை என்னும் விண்மீன் நிறைமதியைச் சேர்ந்து வரும் திங்கள் சித்திரை. விசாகம் சேர்ந்து வரும் திங்களே கார்த்திகையாகும். தமிழ் நாட்டு விழாக்களுங்கூட இவ்வாறான நிறைமதி நாட்களிலே தானே நிகழ்கின்றன? கார்த்திகைத் திருநாளும் கார்த்திகை மாதத்தில் கிருத்திகையோடு கூடிய நிறைமதிநாளில் வருகின்றது. இதை நக்கீரர் அழகுபட எடுத்துக் காட்டுகின்றார். சோர்ந்த உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் அமைகின்றது இவ்விழா. தலைவனைப் பிரிந்து தளர்ந்த உள்ளத்தோடு இருந்த தலைவியைக் 'கார்த்திகை விழாவிற் கலந்து மகிழவா.' என அழைக்கின்றாள் தோழி. மழைக்கால் நீங்கிய கார்த்திகையின் மாலைக்காலம். நிறைமதி கார்த்திகை நாளில் 'குறுமுயல் மறுநிறம்' கிளரத் தோன்றுகின்றது. தெருவுதோறும் மாலை தூக்கி மக்கள் விளக்குகளை வரிசை வரிசையாக வைக்கின்றனர். ஊரே விழாவில் சிறக்கின்றது. அவ்விழாவை ஊருடன் கூடிக் கொண்டாட வருக' என்று கணவனைப் பிரிந்து கவன்று நின்ற தலைவியின் சிந்தை மாற்றும் வகையில் அழைக்கிறாள் தோழி.

'மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகல்இரு நடுநாள்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் லம்ம!' (அகம். 141)

என்பது நக்கீரர் வாக்கு.

241

...ERSITY EXTENS...

பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் சேர மன்னராகிய பெரும்புலவர் இவ்விழாச் சிறப்பை விளக்கீட்டுப் பெருஞ்சிறப்பை இனிய உவமை முகத்தால் காட்டி மகிழ்கின்ருர்.

'அருவி யான்ற உயர்சிமை மருங்கில்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலைஇல மலர்ந்த இலவம்' (அகம். 185)

என்பது அவர் வாக்கு.

இவ்வாறே புறநானூற்றிலும் பிற சங்க இலக்கியங்களிலும் இவ்விளக்கீட்டு விழாவாகிய கார்த்திகை நாள் ஆங்காங்குப் பாராட்டப்பெறுகின்றது. ஆகவே, சங்க காலந்தொட்டு, சம்பந்தர் காலம் உள்ளிட்டு இன்றுவரை இவ்விழா, தமிழ் மக்களால் போற்றப்படும் ஒரு பெருவிழாவாக அமைகின்றது என்பது தேற்றம்.

இவ்விழா, பிற்காலத்தே சமயச் சார்போடு பொருந்திய விழாவாகக் காட்டப்பட்டுள்ளது. வைணவர்கள் காஞ்சியில் திருமாலை 'விளக்கொளிப் பெருமாள்' என்றே வழங்கி, இவ்விளக்கொளியின் சிறப்பைப் போற்றினுர்கள். திருமால் பிரமயாகத்தை அழித்துத் தாமே தீப்பிழம்பான விழா, கார்த்திகை விழா என்பர் சிலர். அட்டமங்கலங்களுள் ஒன்ருகிய இவ்விளக்கின் சிறப்பை, இவ்விளக்கொளியோடு தொடர்பு படுத்திப் புகழ் பெற்ற திருமால் அமிசம் பெற்ற அரசர்களைப் பாடும் முகத்தான் புறப்பொருள் வெண்பா மாலை என்னும் நூல் 'விளக்கீட்டு நிலை' என்னும் துறையில் பாராட்டுவதை அறிகிருேம்.

விளக்கில் இறைவனை இருத்தி வழிபடும் விழாவாக இதைச்சைவரும் கொண்டாடினர். கார்த்திகை

முன்னுளாகிய பரணியில் தொடங்கி, கார்த்திகையில் பேரொளிப் பிழம்பாக இறைவனைக் காணும் விழாவாக இது அமைந்தது. இந்தக் கருத்துத்தான் இன்றும் திருவண்ணுமலையில் கார்த்திகை விழாவில் கையாளப்படுகிறது. திருவண்ணுமலையில் இறைவனே தீப்பிழம்பானுன் என்பர் சைவர்.

இது பற்றி வழங்கும் புராணக் கதையும் ஒன்று உண்டு: கடவுள் திருமுன் எரியும் விளக்கைத்தூண்டின் புண்ணியம் உண்டு என்பர் புராணகாரர். ஓர் எலி எண்ணெயைக் குடிக்கும்போது திரி தானுகத் தூண்டப்பட, அப்புண்ணியத்தால் அது அரசனுயிற்றென்றும், பின் ஆணவத்தால் கோயில் வலம் வரும்போது தவறிழைக்க, இறைவன் சாபமுற்றதென்றும், பின் சாப நீக்கம் பெற இக்கார்த்திகை விளக்கீட்டைச் செய்து நலமுற்றதென்றும் கதை கூறுவர். கதை மெய்யென்று கொள்ளத் தேவையில்லை. மேற்கண்ட அனைத்தும் தமிழ் நாட்டில் கார்த்திகை விழாத் தொன்று தொட்டு வந்த ஒன்று என்றும், அதில் விளக்கொளி வரிசை வரிசையாகச் சிறக்குமென்றும், அக்கால முதல் தமிழ் நாட்டில் ஓங்கியிருந்த சைவரும் வைணவரும் ஒரு சேர இவ்விழாவைக் கொண்டாடி வந்தார்களென்றும், இவ்விழா இன்றும் நம்முன் நன்கு போற்றப்படும் ஒரு நல்விழாவே என்றும் நாம் அறிகின்ருேமன்ருே? ஆம்! இவ்விழாவின் பொருள்தான் என்ன?

தமிழ் நாட்டில் மக்கள் பல விழாக்களைக் கொண்டாடினூர்கள். அவைகளையெல்லாம் ஏதோ பொழுது போக்கு என்ற அளவில் அவர்கள் கொண்டாடவில்லை. நாடகம் காண்பது போலவும் பிற வேடிக்

கைகளைப் போலவும் அவர்கள் விழாக்கள் அமைத்தில்லை. ஆனால், வேடிக்கைகளும் அவற்றில் நிறையக் கலந்திருக்கின்றன. அத்துடன் 'நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை,' என்ற நல்ல கருத்தாலேதான் விழாக்கள் நாட்டில் அமைந்திருந்தன. புற அழகில் மட்டும் கருத்திருத்தாது உள்ளத்து நல்லொளியையும் போற்றிப் புரந்தனர் பண்டைத் தமிழர். அதன் விளைவாகவே அழகிய விழாக்கள் தமிழ் நாட்டில் அரும்பின.

ஆடியில் தொடங்கிய தமிழர்தம் உழைப்பின் பயன் கார்த்திகையில் கைகூடத் தொடங்கும். முதலாவதாகக் 'கார்' நெல் அறுக்கும் காலம் கார்த்திகையன்றோ? கார் என்பது மேகத்தின் பெயர். அப்பெயர் அது பெய்யும் காலத்திற்குப் பொருந்தி, பின் அக்காலத்து அறுக்கும் நெல்லுக்கு ஆயிற்றென்பர் இலக்கண நூலார். ஆம்! கார்த்திகையில் அறுக்கும் நெல் கார் நெல். அதுவே, உழவாண்டுக் கணக்கில் (பசலி) முதலாவதாகப் பெறும் நெல். பெற்ற பயனைக் கொண்டு சுற்றம் அருத்துவதுதான் தமிழர்தம் தலையாய பண்பு. அப்பண்பாட்டில் கார்த்திகை விழாவினைப் புதிய நெல் கொண்டு சிறப்பித்தனர். கார்த்திகைக்கு 'அவல்' ஓர் இன்றியமையாத பொருள். நெல்லை அவலாக்கி அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுத்துத் தாமும் உண்பர். முற்றிய நெற்கதிர்களைக் களம் கொண்டு திருத்திய களஞ்சிய நெல்லைச் சோறுக்குப் பொங்கலிட்டு விழாச் செய்வதைப்பற்றியே பொங்கல் விழா எழுந்தது. எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் நல்லுள்ளம் ஒளி பெற்ற உள்ளந்தானே? 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்.'

அவ்வாக்கு நல்வாக்காக அமைந்து அனைவரையும் தழுவிச் செல்லும் செயலாகச் சிறக்கும். அச்சிறப்பையே விளக்கொளியாகக் கொண்டனர் தமிழர்!

விளக்கிற்கு வேண்டிய எண்ணெய் வித்துக்களாகிய நிலக்கடலை முதலிய நிறைந்து விளையும் பருவம் அது. அந்நெய்யில் திரியிட்டு வரிசை வரிசையாக விளக்கேற்றும் விழாவே **கார்த்திகை விளக்கீடு.** இக்கருத்துக்களைத்தான் பழம்பெரும் புலவர் நக்கீரர், 'பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றி... விழவுடன் அயர வருக!' என்று அழகுபட எடுத்துக்காட்டுகின்றார். ஆம்! நாடு வாழ நாம் வாழ வேண்டும் என்ற நல்ல அடிப்படையில் அமைந்த விழா இது. என்றென்றும் இவ்விழா ஏற்றம் பெற்றுச் சிறக்க என வாழ்த்துவதல்லாது செய்வது வேறு யாது? வாழ்க விளக்கீட்டு விழா! உள்ளொளி விளங்கி உலகம் உயர்க!

# மார்கழி நோன்பு ★ ★

**மா**தங்களில் சிறந்து விளங்குவது மார்கழி மாதமாகும். மக்கள் மனத்திலுள்ள மாசுகளையும் புற அழுக்குகளையும் போக்கும் திங்கள் இதுவாகும். அறியாதவர் இம்மாதத்தைப் 'பீடை மாதம்' என்பர். பீடை என்பனவற்றையெல்லாம் அகத்தும் புறத்தும் இல்லாமல் அகற்றும் மாதமாகிய இதைப் பீடை மாதம் எனல் எவ்வாறு பொருந்தும்? 'பீடை போக்கும் மாதம்' எனக்கொள்ளல் சாலச் சிறந்தது.

இம்மார்கழி அனைவருக்கும் சிறந்த ஒரு திங்கள். எவ்வித வேறுபாடுமின்றி மக்கள் இம்மாதத்தே விழா ஆற்றுகின்றார்கள். சிறப்பாக நில நடுக்கோட்டுக்கு வடக்கே இருக்கும் மக்களுக்கு இத்திங்கள் மகிழ்வளிக்கும் திங்கள். தெற்கு நோக்கிச் செல்வதாகக் கணக்கிடப்படும் சூரியன் இம்மாதத் தொடக்கத்திலேதான் (டிசம்பர் 21) வடக்கு நோக்கித் திரும்பு

கின்றான். வாடையும் குளிரும் போக்கும் வகையில் அவன் ஒளிக் கதிர் வடக்கே நோக்கி வருகின்றது. தமிழர்கள் தைத்திங்கள் முதல் தேதியைச் 'சங்க ராந்தி' என்ற பெயரால் சூரியன் திரும்பும் நாளாகக் கொண்டாடுகின்றனர். எனினும், உண்மையில் கதிரவன் ஒளி திரும்பும் நாள் மார்கழியிலேயே அமைகின்றது.

தமிழ் நாட்டில் மக்கள் இத்திங்களை விழாத் திங்களாகவே கொண்டாடுவார்கள். இத்திங்களின் முதல் நாள் தொடங்கி முடிவு நாள் வரை மக்கள் விடியலில் எழுந்து விழா ஆற்றுவர். ஆடவரும் பெண்டிரும் தூய நீரில் மூழ்குவர்; தத்தம் வழிபடு கடவுளரை வணங்குவர்; வீடு மெழுகி விளக்கேற்றி வைப்பர்; தெருக்களைத் துப்புரவு செய்து, நீர் தெளித்துக் கோலமிட்டு, பூசனிப் பூவிட்டு மகிழ்வர்; தத்தம் சமயப் பாடல்களையும் பாடுவர். தமிழ் நாட்டுக் கோயில்களிலெல்லாம் எத்திங்களிலும் விடியலில் ஒலியாத பூசை மணி ஒலி, இத்திங்களில் விடியற்காலையில் ஒலிக்கும். உள் மாசும் புறமாசும் ஒருங்கே அகலும் ஒரு திங்கள் இது. இத்திங்களில் வீடுகளைத் துப்புரவு செய்து, வெள்ளையடித்து, நிறம் தீட்டுவர். இறுதி நாளில் எல்லாக் கழிவுகளையும் அப்புறப்படுத்தி, அனைத்தையும் நெருப்பிட்டுப் பொசுக்கி, நீராடி மகிழ்வர். ஆம்! அகமும் புறமும் ஒருசேர உயர்வு பெற்றுச் சிறக்கும் திங்கள் மார்கழி தானே!

இம்மார்கழியில் மங்கையர் நோன்பினை மேற் கொள்வர். அதற்குப் 'பாவை நோன்பு' என்பது பெயர். மார்கழி நோன்பென்றும் அதைக் கூறுவர். மணமான பெண்கள் இத்திங்களை மங்களத் திங்க

ளாகக்கொண்டு, நீராடி மகிழ்ந்து, நல்லறங்களைப் புரிவர். மணமாகாத கன்னிப் பெண்களோ, இத் திங்களில், தாம் தாம் வழிபடு கடவுளரைத் தமக்கு நல்ல கணவரைத் தருமாறு வேண்டுவர். இந் நோன்பு தமிழ் நாட்டில் மிக்க பழங்காலந்தொட்டு நடைபெற்று வந்த ஒன்றாகும். சைவரும் வைண வரும் இவ்விழாவைக் கொண்டாடி வந்தனர் என் பது உறுதி. மணிவாசகர் பாடிய 'திருவெம்பாவை' யும், ஆண்டாள் பாடிய 'திருப்பாவை'யும் இவ் விழாவை வலியுறுத்துவன அல்லவோ? அப்பாடல் களுள் மணமாகாப் பெண்கள் விடியலில் எழுந்து ஒருவரை ஒருவர் அழைத்துக்கொண்டு நீர் நிலைகளை அடைந்து நீராடி இறைவனை நோக்கி வேண்டும் நிலை எண்ணத்தக்கதாகும்.

விடிந்தும் உறங்கும் பெண்களை மற்றப் பெண் கள் விழிக்கச்செய்வதும், அவர்கள் கூறும் மொழி களும், இருவருக்குமிடையில் நடக்கும் சொற் போரும் வேடிக்கையானவை.

> 'மானேநீ நென்னலை நாளைவந்து உங்களை
> நானே எழுப்புவன் என்றலும் நாணமே
> போன திசைபகராய்.' (திருவெம்பாவை)

என்று முன்னாள் தானே முன் வந்து எழுப்புவதா கச் சொன்ன பெண் இருக்குமிடம் தெரியாது உறங் கும் நிலையைப் பிற பெண்கள் எள்ளி நகையாடு கின்றனர்.

விடிந்த நிலையினை,

> 'கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
> மேய்வான் பரந்தனகாண்'

என்றும்,

'உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்
கூம்பினகாண்'
(திருப்பாவை)

என்றும் ஆண்டாள் காட்டி உறங்கியவரை எழுப்பும்போது யார்தான் உறங்கமுடியும்? அப்படி அளவு மீறித் தூங்கியவரையும் ஆண்டாள் 'கும்பகருணனும் தான் தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானே?' என்று நையாண்டி செய்யும் போது அவர்களும் எழுந்திருக்கத்தானே செய்வார்கள்?

மணமாகாத பெண்கள் அனைவரும் எழுந்து, இவ்வாறு ஒருவரை ஒருவர் கூவி அழைத்துக் கொண்டு, ஆற்றங்கரைக்கோ குளக்கரைக்கோ செல்வர்; சென்று, அங்குள்ள தூய குளிர்ந்த நீரில் தோய்ந்து ஆடுவர்.

'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!'

என்று மார்கழியின் சிறந்த ஆதிரை நாளாகிய நிறை மதி நாளில் ஆண்டாள் அழைக்கும் பாட்டொலி யாரைத்தான் பின்பற்றிச் செல்லத் தூண்டாது? அங்குச் சென்று அவர்கள் நீர் ஆடும் காட்சியே சிறந்த ஒன்றாகும். எப்படி நீராடுகிறார்கள்?

'மொய்ஆர் தடம்பொய்கைப் புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்து'

அப்பெண்கள் ஆடும் நிலையை மாணிக்கவாசகர் கூறும்போது நாம் நம்மை மறக்கிறோமல்லவா!

நீராடிய பின் பெண்கள் செய்வதென்ன? அவர்களது அடுத்த செயலும் அனைவரையும் சேர்த்துக் காட்டுகின்றது. அனைவரும் ஒன்றுகூடிப் பூணணிந்

தும், பூச்சூடியும், ஆடை உடுத்தும், அறுசுவை உண்டி உண்டும் மகிழும் விழாவாக அது அமை கின்றதென்பதை ஆண்டாளே காட்டுகிறார்.

'கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினல் நன்றாகச்
சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம்அணிவோம்;
ஆடை உடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி இருந்து குளிர்ந்துஏல்ஓர் எம்பாவாய்!'

(திருப்பாவை, 27)

என்ற பாட்டு அவர்தம் உண்டாட்டை விளக்கு கின்ற ஒன்றாகும்.

மூழ்கி, அணிந்து, உண்டு, ஆடுவதோடு அவர் தம் விழா முடிந்துவிடவில்லை. கன்னியர் தாம் விரும்பும் கணவரைப்பற்றி ஆண்டவன் முன் கூறும் சொற்களும் அறிந்து மகிழத்தக்கன.

ஆண்டாள் ஆண்டவனையன்றி மற்றவரை மணக்க விரும்பாதவர்; 'மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று பாடியவர். எனவே, அவர் தாம் வழிபடும் திருமாலுக்கு உரியவராகவே வாழ விரும்புகின்றார். அதை,

'சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துஉன்
பொற்றாமரைஅடியே போற்றும் பொருள்கேளாய்:
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்!'

என்று வாய் திறந்தும் கூறிவிட்டார். வழிவழி

வருகின்ற பிறவிகளிலும் அவரது அடி பிரியாப் பெருவாழ்வை விரும்பினர் ஆண்டாள். மணிமொழியார் இக்கருத்தை அடியவர் சார்பாக்கி நன்கு விளக்குகின்றார். தெய்வ நெறிபற்றி ஒழுகும் அற நெறி பிறழாத நல்லவரையே அக்கன்னிப் பெண்கள் தம் காதலராகப் பெற விரும்பினர்கள் என்பதை அவர் வாக்கால் அறியலாம்.

'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்குஅப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான்! உனக்குஒன்று உரைப்போம்கேள் :
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க!
எங்கை நினக்குஅல்லால் எப்பணிவும் செய்யற்க!
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க!
இங்குஇப் பரிசே எமக்குஎங்கோன் நல்குதியேல்
எங்குஎழில்என் ஞாயிறு எமக்கு ?'

என்று தம் விருப்பத்தை வீறு பெறக் காட்டும் நிலையை நாம் மறக்க முடியுங்கொல்?

இந்த அளவோடு அவர்கள் நோன்பு முடிந்து விட்டால் நாம் கவலைப்படவேண்டுவதில்லை. அவரவர் வழிபடு கடவுளர் அவர்தம் குறை கேட்டு ஒத்த நற்கணவரைக் கூட்டிவைப்பர். அதில் நாம் காணும் சிறப்பு என்ன? ஆனல், அக்கன்னியர் தம் கருத்தை அந்த அளவோடு கட்டுப்படுத்தவில்லை. பரந்த உலகம் அவர் முன் வருகிறது. 'நாம் மட்டும் விரும்பிய கணவரைப் பெறின் பயன் என்ன? வையகமும் துயர் தீர்ந்து வாழவேண்டாவா?' என்ற நல்லுணர்வு அவர்களுக்குத் தோன்றுகிறது. தமிழ் நாட்டின் விழாக்களின் அடிப்படையே 'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை,' என்பதிலேதானே அமை

கின்றது? எனவே, தாம் வேண்டும் கணவரைக் கேட்டு இம்மார்கழி நோன்பு கொண்டாடும் மகளிரும் பரந்த உலகை நோக்குகிறார்கள். ஆம்! இவ்வுலகம் வாழ நன்மழையைப் பெய்வித்து விளைவினைப் பெருக்க அவர் தம் வழிபடு கடவுளை வேண்டிப் பணிகின்றனர். தானியங்கள் விளைந்து, பசுக்கள் பால் சுரந்து, வையகம் துயர் நீங்கி வளம் கொழிக்க ஆண்டாளும் மணிமொழியாரும் ஆண்டவனை நோக்கி வேண்டும் பாடல்கள் மக்கள் உள்ளங்களில் என்றும் தங்க வேண்டுவனவாகும்.

'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினல்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயல்உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்துஏல்ஓர் எம்பாவாய்!'

என்று ஆண்டாள் மாதமும்மாரி பெய்து செந்நெல் விளைந்து சிறக்கவும், பசுக்கள் மடி நிறைந்த பால் சுரந்து ஊட்டவும் வையகம் வாழ வேண்டிய உண்மையை உணர்ந்து கண்ணனை வேண்டும் காட்சியை உள்ளம் மறைந்து அமையுமோ!

அருள் உள்ளம் வாய்ந்த மணிமொழியார் மழையின் பண்பினை அன்னையின் பண்பாகவே பாராட்டுகிறார். இயற்கையாகிய மேகமும், அதன் விளையாடலும், பொழிவும் உமையின் உருவத்தை அவர் உள்ளத்தே கொண்டு வருகின்றன. அப்பொழிவே அவர்தம் அருள் என்று முடிக்கின்றார். அவர் வாய்மொழியை இதோ உங்கள் முன் வைக்கிறேன்:

'முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துஉடையாள்
என்னத் திகழ்ந்து,எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து,எம் பிராட்டி திருவடிமேல்
பொன்னம் சிலம்பிற் சிலம்பி, திருப்புருவம்
என்னச் சிலைகுலவி, எந்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை.'

என்ற திருத்தகு பாடல் சிந்தைக்கு விருந்தாவதன்றி வேறு யாதோ!

இவ்வாறு தாம் மட்டும் வாழ்வதன்றி—தம் விருப்பத்தை மட்டும் நிறைவேற்றிக்கொள்ளுவதன்றி—வையகத்தையே வாழ்விக்க நோற்கும் இம் மார்கழி நோன்பு நம் நாட்டுப் பழம்பெருவிழாக்களுள் ஒன்று என்பதை எண்ணும் போது நாம் மகிழத்தான் வேண்டும். ஆனால், அம்மகிழ்ச்சி என்றும் நிலைக்க நம் முன்னோர் வழி செய்யவில்லை. மார்கழி மாதம் பொதுவாகச் சிறந்த முறையில் போற்றப்படுவது இன்றைக்கும் காணும் ஒரு நிகழ்ச்சிதான். எனினும், கன்னியர் நீர் மூழ்கி வழிபாடியற்றும் வழக்கம் நாட்டில் இல்லை. 'மறைந்தது ஏனோ!' என்று எண்ணும் அதே வேளையில் தமிழ் நாட்டின் மேற்கே நோக்கும் போது அகம் மகிழ்கின்றது. தமிழர் மறந்துவிட்ட பல நல்ல பண்டிகைகளையும் விழாக்களையும் அன்று தமிழராயிருந்து இன்று மலையாள நாட்டவராய மக்கள் மறவாது போற்றுவதைக் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கம் உண்டாகின்றது! ஆம்! இந்த மார்கழி நோன்பு இன்றும் மலையாள மக்களால் நன்கு போற்றப்படுகின்றது.

மலையாளிகளுக்கு ஆண்டில் முறையே முக்கிய விழாக்கள் உள்ளன. 'ஓண விழா' ஒன்று. புத்தாண்டு பிறப்பாகிய 'விசு' ஒன்று. ஆதிரையாகிய இம்மார்கழி நோன்பு ஒன்று. பொதுவாக மார்கழி முழுவதிலும், சிறப்பாக அத்திங்களின் நிறைமதி நாளாகிய திருவாதிரை அதற்குமுன் சில நாட்கள் ஆகியவற்றிலும், பெண்கள் நீராடி, நாம் மேற்கண்டவாறு விழாக் கொண்டாடுவதை மலைநாடு செல்வார் இன்றும் காணக்கூடும். மணமான பெண்களுக்கு 'மங்கள விழா'வாகவும், கன்னியருக்கு 'மணவினை கூட்டும் விழா'வாகவும் அங்கு இது அமைகின்றது. விடியலில் எழுந்து கூடி, குளத்துக்குச் சென்று, ஒரு வகைப் பாட்டு இசைத்து, பறை கொட்டி, அவர்கள் ஆடுவார்கள். அவர்கள் மூழ்கிய பின் இளநீர், வாழைப்பழம், அரிசிச்சோறு போன்ற உணவினைக் கொள்வர்; நன்கு வெற்றிலையைச் சுவைப்பர்; கூந்தலைப் பாதிரிப் பூவால் அலங்கரித்துக்கொள்வர். இவ்விழா இறைவனால் எரிக்கப்பட்ட 'காமன்' மீண்டு எழுந்தது பற்றிக் கொண்டாடுவதாக ஒரு சாரார் கூறுவர். எனவே, தமிழர் மறந்த ஒரு நோன்பு இன்றும் மலையாளத்தில் போற்றப்படுவதறிந்து நாம் மகிழத் தானே வேண்டும்!

மாநிலத்தார் வாழ்கவென்றே அமைந்த இம் மார்கழி நோன்பு தமிழ் நாட்டுப் பழம்பெருவிழா வாகத் திங்கள் முழுவதும் கொண்டாடப்பட்டது. அத்திங்களில் வரும் நிறைமதி நாளாகிய 'திருவாதிரை' அந்நாட்களுள் சிறந்த நாள். அந்த நாளைத் தான் 'அத்தன் ஆரூரன் ஆதிரை நாளால் அது வண்ணம்' என்று சுந்தரர் பாடிச் சென்றார்.

சம்பந்தர், 'ஆதிரை நாள் காணுமே போதியோ?' என்று பூம்பாவையை விளித்தார். தில்லையில் இறைவன் அந்நாளிலேதான் களி நடம் புரிகின்றான். அந்நாளை ஒட்டிய ஏகாதசியிலேதான் அரங்கநாதனும் பவனி வருகின்றான். கிறிஸ்து பிறந்த டிசம்பர் 25ஆம் நாளும் அந்த நாளை ஒட்டித்தான் அமைகின்றது. இவ்வாறு வேறுபாடற்ற விழாவாக, வையகத்தை வாழ வைக்கும் விழாவாக அமைந்த இம் மார்கழி நோன்பு விழா, தன் பெருமை குறையாது நிலைத்து நிற்க வழி காண வேண்டுவது தமிழர் கடமை! ஆம்! இந்நோன்பு விழாவின் இறுதியிலேதான் தூய்மை போற்றும் விழாவாக அமையும் 'போகி'யும், அதை அடுத்து உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும் பொங்கல் விழாவும் வருகின்றன. அவற்றின் சிறப்பை அடுத்த கட்டுரையில் தொடர்ந்து காண்போம்.

# பொங்கல் விழா

'பொங்கல்' என்னும் சொல்லே உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கச் செய்கிறது. பொங்கி வழிவது எப்போது? தேவைக்கு அதிகமாக இருந்து, காத்து வைக்க முடியாத நிலையிலல்லவா பொங்குதல் இயற்கை? பானையில் பால் ஊற்றிக் காய்ச்சும்போது அதன் பெருக்கம் அப்பானையின் எல்லையைக் கடப்பதைத்தானே 'பொங்கல்' என்கிறோம்? ஆம்! அதுபோன்றே மக்கள் வாழ்வின் தேவைகளை வேண்டும் அளவு பெற்று, தேக்கிவைக்கச் சிந்தையிலராகி, 'யாம் பெற்ற இன்பம் வையகம் பெறுக!' என்ற பொங்கிய உளத்தோடு மற்றவருக்கும் வாரி வழங்கும் விழாவே பொங்கல் விழாவாகும்.

பொங்கல் விழா ஒவ்வோர் ஆண்டும் தைத்திங்கள் முதல் நாளில் வருகின்றது. மக்கள் மனமாசும் புற அழுக்கும்போக்கும் மார்கழித் திங்களின் இறுதி நாளில் போகி பண்டிகை உறும். அடுத்த மூன்று நாட்களும் பொங்கல் விழா. பொங்கல் விழா முதல்

நாளில் கதிரவன் விழாவாகவும், இரண்டாம் நாளில் கால்நடை (மாட்டுப் பொங்கல்) விழாவாகவும், மூன்ரும் நாளில் காணும் (காணும் பொங்கல்) விழாவாகவும் சிறக்கின்றது. இவ்வாறு தமிழர் இவ்விழாவினைச் சிறப்புறக் கொண்டாடக் காரணமென்ன?

தமிழன் நன்றி மறவாதவன்; 'செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வில்லை,' என்பதை உணர்ந்தவன். அந்த உணர்ச்சியைக் காட்ட எழுந்ததே இந்தப் பொங்கல் விழா. தமிழருள் பெரும்பாலார் கை வருந்தப் பாடுபடும் உழவர்தம் வாழ்வை மேற்கொண்ட வேளாளர்களே! அவர்தம் உழைப்பின் பலனைப் பெற்ற அந்த வேளையில் உழவுக்கு உதவியவர்கள் முன் நிற்கின்றனர். அவர்களுக்கு நன்றி காட்டும் முகத்தால் நடப்பதே இப்பொங்கல் விழா.

மார்கழித் திங்களின் இறுதி நாள் 'போகி' நாளாகும். மக்கள் அம்மார்கழியில் தங்கள் இல்லங்களைத் துப்புரவுசெய்து வெள்ளையடித்துவர்ணம் பூசி ஒளிபெறச் செய்வர்; தம் உள்ளங்களையும் விடியலில் எழுந்து வழிபாடு ஆற்றுவதன்மூலம் தூய்மை செய்வர். எனவே, துப்புரவின் இறுதிப் பணியே 'போகி'. வீட்டிலும் உளத்திலும் நாட்டிலும் உள்ள மாசுகளைப் போக்குவதே போகி. ஒன்ருன இறைவனை வழிபடுவதற்கு உளத் தூய்மை வேண்டுவதன்ருே? தூய உள்ளத்திலேதானே 'நாடெங்கும் வாழவேண்டும்' என்ற நல்லெண்ணம் உண்டாகும்? ஆகவே, போகி உள்ளத்தைத் தூய்மையாக்குகிறது.

வடநாட்டிலும் இப்போகி விழாவினைக் கொண்டாடுகிருர்கள். ஆனல், அவர்கள் இதை இந்திரனுக்கு வழிபாடு ஆற்றும் கேளிக்கை விழாவாகக்

கொண்டாடுகிறார்கள். 'போகி' என்பது இந்திரன் பெயர்களுள் ஒன்று. எனவே, அப்பெயர் கொண்ட இந்திரனை வழிபட்டு மகிழ்வர் வடநாட்டு மக்கள். தமிழர்தம் விவசாய முறை வழிபாட்டிற்கும் இந்திர வணக்கம் ஏற்றதுதானே? 'இந்திரன் மேகங்களுக்குத் தலைவன்,' எனவும், 'அவனைப் போற்றி மழையைப் பெறலாம்,' எனவும் புராணங்கள் கூறுகின்றனவே! ஆகவே, மழையளித்து விளையுள் பெருக வைத்த இந்திரனுக்கு உரியவிழாவாகப் போகியைக் கொள்ளினும் தவறில்லை.

உள்ளும் புறமும் தூய்மையுள்ள மக்கள் தைத் திங்கள் முதல் நாளில் சூரிய வழிபாடாகிய பொங்கல் விழாவைச் சூரியனுக்கு நன்றி செலுத்தும் விழாவாகப் போற்றுவர். ஆடியில் பெய்த மழை வளத்தால் வயல் வளம் பெருக, அங்கு முற்றிய கதிர்களைக் கொய்து களஞ்சியம் நிறைத்து, நினைக்கின்றார் தமிழர். ஆம்! அம்மழைக்கு முதற்காரணன் சூரியன் அல்லனோ என்ற உணர்வு அவர் உள்ளத்தே உதிக்கின்றது. அவ்வுணர்வு வழியே பெற்றது கொண்டு சுற்றம் அருத்துமுன் அச்சூரியனுக்கே சோறிடுகின்றனர் தமிழ் மக்கள்.

ஆடியில் உழவுத் தொழிலை மேற்கொள்ளும் தமிழ் நாட்டு உழவர் கை வருந்தப் பாடு படுவர். அதன் பயன் கார்த்திகை மார்கழியில் உண்டாகும். முதன்முதலாகப் பெற்ற அரிசியைக்கொண்டு புதுச்சோறு ஆக்குவர். தம் களஞ்சியம் நிறைவது கண்டு அவர் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கும். அப்பொங்கலை உழவர் சூரியனுக்கு இட்டு மகிழ்வர். பொங்கலன்று சூரியனுக்கு என்று ஆக்கும்

அத்தனை உணவும் உழவர்தம் கைப்பொருள்களே யாகும். அவர்கள் விடியலில் எழுந்து மூழ்கி, தூய ஆடை உடுத்து, தத்தம் வீட்டில் புத்தடுப்பு மூட்டுவர். வாயிலிலும் பிறவிடங்களிலும் புது முறைக் கோலங்கள் அமைப்பர். புத்தடுப்பில் பாலும் அரிசியுமிட்டுப் பொங்கலிடுவர். தாமே பயிரிட்ட காய்கறிகளை உணவாக்கி உடன் வைப்பர். அனைத்துக்கும் முதற்காரணனான கதிரவனை முன் நிறுத்தி உணவனைத்தும் அட்டு, பின் தாம் உண்டு மகிழ்வர். ஆம்! இது தமிழ்நாட்டுத் தலையாய மக்களை வாழ்விக்கும்—உணவளிக்கும்—உழவர் விழா!

கதிரவனுக்கு நன்றி செலுத்துவதோடு தமிழர் அமைந்துவிடவில்லை. வயலில் தம்முடன் பாடுபட்டார் யார் யார் என எண்ணிப்பார்க்கின்றனர். மாடுகள் முன் வருகின்றன. ‘மாடு’ என்ற சொல்லுக்கே ‘செல்வம்’ என்பது பொருள். தம் செல்வத்துட் செல்வமாகத் தமிழர் மாடுகளைப் போற்றி வந்தனர். அவர்கள் கலப்பை தாங்கித் தம்முடன் வயலில் உழைத்தவற்றையெல்லாம் நினைக்கின்றனர். உடனே அவைகளுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றனர். அவ்விருப்பத்தால் உண்டான விழாவே மாட்டுப்பொங்கல். அன்று மாடுகளை நன்கு குளிப்பாட்டி, மாலையிட்டு, மணி கட்டி, பொட்டிட்டு, பூவிட்டு, பொங்கலும் இட்டுப் போற்றும் காட்சி இன்றும் கிராமங்களில் கண்கொளாக் காட்சியாய் விளங்குவதை அறியாதார் யார்?

தமக்குமேல் காய்ந்து செல்லும் கதிரவனையும், பக்கத்தில் கொட்டிலிலுள்ள மாடுகளையும் நன்றியோடு நோக்கிய தமிழர் கண்கள் மேலும் விரிந்தன.

தம்மைப்போன்று தரணியில் உள்ள மற்றவரும் வாழ்கின்ருர்களா என அறிய விரும்பினர் அவ் வயலுழவர். அவ்விருப்பம் அவர்களைக் 'காணும் பொங்கல்' கொண்டாட வைத்தது. தங்கள் வீடு களிலிருந்து வெளிப்போந்து உற்ருர்க்கு மட்டுமன்றி அற்ருர்க்கும் அலந்தார்க்கும் உதவும் காட்சியே காணும் பொங்கல் விழா. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி, அனைவரும் ஒருவரையொரு வர் கண்டு கலந்து அளவளாவும் அருமை நாளே காணும் பொங்கல். 'நாம் பெற்ற இன்பம் வைய கம் பெறுக!' என்ற தமிழ்ப் பண்பாட்டிலே காணும் ஒவ்வொருவரையும் 'உங்கள் வீட்டில் பால் பொங் கிற்ரு?' என்று பண்போடு விசாரிப்பார்கள். தம்மை நாடி வரும் பணியாளர்களுக்குப் பொன்னும் ஆடையும் கொடுத்து மகிழ்விப்பர். உற்ருர் உறவி னரை வீட்டுக்கு வரவழைத்து உணவிட்டுச் சிறப் பும் செய்து வழியனுப்புவர்; மணமான புது மண மக்களுக்கு நல்விருந்தும் ஆடைகளும் அணிகளும் தரப்பெறும். செல்வரும் வறியரும், சாதி சமய வேறுபாடின்றி இவ்விழாவைக் கொண்டாடுவர். இவ்விழாவின் அடிப்படையே 'நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை,' என்பதுதான். இவ்வாறு போகியில் தொடங்கி, காணும் பொங்கல் வரை சென்று முடியும் இப்பொங்கல் விழாவே தமிழ் நாட் டின் தலையாய விழா!

இனி இவ்விழாவினைக் கொண்டாடும் முறை யைச் சற்று நோக்குவோம்: இவ்விழா உழவர் விழா என்பதைக் கண்டோம். எனவே, அவர்கள் தம் விளை பொருள்களை வைத்தே இவ்விழாவினைக் கொண்

டாடுவார்கள் என்பதையும் அறிந்தோம். அவை என்ன? ஏன் அவ்வாறு கொண்டாட வேண்டும்?

மக்கள் தத்தம் வாழ்வின் தேவைகளைத் தாமே தேடிக்கொள்ள வேண்டும் என்பது நியதி. அது தான் முறையும். தத்தம் உணவுக்கும் உடைக்கும் பிறர் கையை எதிர் நோக்கி வாழ்கின்றவர் அனைவரும் மனித வாழ்வில் வாழாதவராகவே கொள்ளப்படுவர். எண்பது கோடி எண்ணும் உளம் படைத்த மனிதனின் அடிப்படைத் தேவைகளைத் தேடிக்கொள்ள ஒவ்வொருவரும் கடமைப் பட்டவர் என்பதைக் காட்டுவதே பொங்கல் விழா.

தம் வீட்டில் தூய்மையைச் செய்து பொங்கலன்று மணலாலும் செங்கல் பொடியாலும் கோலமிடுவர். அக்கோல முறையே புதிதாக இருக்கும். இக்காட்சியை ஆண்டாள்,

'தையொரு திங்களும் தரைவிளக்கித்
தண்மண் டலமிட்டு மாசி முன்னுள்
ஐயநுண் மணல்கொண்டு தெருவணிந்து
அழகினுக்கு அலங்கரித்து'

எனக்காட்டுகின்றார். மேலும் மகளிர் விடியலில் எழுந்து, துப்புரவு செய்து, நீராடி, சுள்ளிகொண்டு பொங்கல் அடுப்பு ஏற்றும் காட்சியை அவரே,

'வெள்ளை நுண் மணல்கொண்டு தெருஅணிந்து
வெள்வரைப் பதன்முன்னம் துறைப டிந்து
முள்ளும்இல் லாச்சுள்ளி எரிம டுத்து
முயன்றுஉனை நோற்கின்றேன்'

என்று தம்மேலே சார்த்திக் கூறும் காட்சி, சாலச் சிறந்த ஒன்றன்றோ!

பொங்கலுக்கு அவர்கள் கொள்ளும் பொருள்கள் என்னே? வயலில் விளைந்த நெல்குற்றிய பச்சரிசி, தோட்டத்தில் பயிராகிய கரும்பு, தேங்காய், பூசனி, அவரை, கீரை, மஞ்சள், வள்ளி ஆகிய பொருள்கள், இவைகளை ஒவ்வொருவரும் தாமே உண்டாக்கித் தந்ததில் மகிழ்ச்சி கொள்வார்கள். அவற்றுடன் தாம் பயிரிட்ட பருத்திகொண்டு நூலாக்கி நெய்யும் ஆடையும் இன்றியமையாப் பொருளாக அமைகின்றது. ஒன்றும் பிறர் பொருளாகவோ, பிற நாட்டுப் பொருளாகவோ அமைதலாகாதென்பதே பொங்கல் விழாவின் நோக்கம். இதை அறிந்தார் எத்தனை பேர்? ஏதோ கடையில் காசு கொடுத்து வாங்கி வைத்துப் பொங்கல் கொண்டாடி, அதன் காரணத்தை அறியாத மக்களை எண்ணித்தான் போலும் பாரதியார்,

‘உப்பென்றும் சீனிஎன்றும்
உள்நாட்டுச் சேலைஎன்றும்
செப்பித் திரிவாரடி—கிளியே
செய்வ தறியாரடி!’

என்று இடித்துக்காட்டிச் சென்றார்! பொங்கலன்று போற்றி வைக்கும் பொருள்களை ஆண்டாள்,

‘காயுடை நெல்லொடு கரும்பு அமைத்துக்
கட்டி அரிசி அவல்அமைத்து
வாயுடை மறையவர் மந்திரத்தால்
...வணங்குகின்றேன்’

என்று வரிசைப்படுத்திக் காட்டுகின்றார். எனவே, இப்பொங்கல் விழா கைவருந்தப் பாடு படும் உழவர் தம் உழைப்புப் பொருளால் கொண்டாடும் ஒப்பற்ற விழா என்பது புலனாகின்றதன்றோ!

இப்பொங்கல் விழாவைக் கதிரவனோடு பிணைப்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. கதிரவன் தென்திசை நோக்கிச் செல்லும் கதியிலிருந்து மாறி, வடதிசை திரும்பும் நாளாக இதைத் தமிழர் கொண்டாடுகின்றனர். நில நடுக்கோட்டுக்கு வடக்கே இருக்கும் ஒவ்வொருவரும் இந்நாளைக் கொண்டாடக் கடமைப்பட்டவர்தாமே! ஆம்! சூரியன் வடதிசை திரும்பி வாடையை மாற்றி மந்தமாருதம் வீசச் செய்யும் நாள் அண்மையில் உள்ளதை அறியாதார் யார்? அனைவருக்கும் 'தை பிறந்தால் வழி பிறக்கும்,' என்ற பழமொழி தெரியுமே! ஆம்! மக்கள் வாழ்வுக்கு வழி பிறக்கும் நாள் தைப்பொங்கல் நாள். வாடும் மக்களுக்கு வழி பிறக்கும்—நானிலம் செழிக்க நலம் பிறக்கும்—நல்ல நாள் இந்தப் பொங்கல் நாள். 'வையகமெல்லாம் தழைக்க! என்று இப்பொன்னாளில் ஒவ்வொருவரும் உளத்தூய்மை பெற்று உயர்வடைய வேண்டுமென்பது என் ஆசை! வாழ்க பொங்கல்! வளர்க இன்பம்!

# உத்தரத் திருவிழா ★

தமிழ் நாடு விழாக்களுக்குப் பேர் போனது. ஆண்டு முழுதும் ஏதாவது ஒவ்வொரு விழா நடந்து கொண்டேதான் இருக்கும். தமிழர் கொண்டாடிய விழாக்கள் வேடிக்கைக்காக மட்டும் அமைந்தன அல்ல. வீடும் நாடும் ஒருசேரப் பயன் பெறும் வகையில் அவ்விழாக்கள் கொண்டாடப் பெற்றன. நாட்டு மக்கள் யாதொரு வேறுபாடுமின்றி, அனைவரும் ஒன்றிக் கலந்து, நல்ல விழாக்களைக் கொண்டாடினர் என்பது அறிந்த ஒன்று. அத்தகைய விழாக்களுள் பங்குனி உத்தர விழாவும் ஒன்றாகும்.

தமிழர்தம் விழாக்கள் பெரும்பாலும் நிறை மதியை ஒட்டியனவாகவே அமைந்துள்ளன என்பதைச் சில விழாக்கள் மூலம் முன் கண்டிருக்கிறோம் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தியவர்கள்; இயற்கையிலே தோய்ந்து இன்பம் கண்டவர்கள். அவ்வியற்கையின் எழில் நிறைமதி நாட்களில் நன்கு விளங்கும். பூரணச் சந்திரன் வான வீதியில் தவழ்ந்து செல்லும் நாளை இன்றும் போற்றி வியவாதார் உளரோ! காதலர் மட்டுமன்றி

மாதவரும் மற்றவருங்கூட அந்தப் பால் நிலாவினைக் கண்டு அதன் வழிப் பெருக்கெடுக்கும் இன்ப வெள்ளத்தைப் பருகி மகிழ்வர். ஆம்! அத்தகைய நிறைமதி நாள் திங்கள்தோறும் வந்துவந்து போகின்றது. அவற்றுள் சிறந்த நிறைமதி நாளாக — இன்பம் பெருக்கெடுக்கும் முதல் நாளாக — அமைவது பங்குனியின் நிறைமதி நாளாகிய உத்தர நாளாகும்.

வாடைக் காற்றும் நடுங்கும் குளிரும் வருத்தும் பனியும் நீங்கி வசந்த காலம் அரும்புவதைக் காட்டும் மாதம் பங்குனியாகும். இலை உதிர்ந்து பட்டனபோலக் காணும் மரங்களும் செடிகளும் புதுத்தளிரைக் கொண்டு பூத்துக் குலுங்கும் மாதம் இந்தப் பங்குனி மாதமேயாகும். தென்திசைக் கோடியில் சென்ற சூரியன் வடதிசைத் திரும்பி, பூமத்திய ரேகையைத் தாண்டி, நம்மை நோக்கி வரும் திங்கள் (மார்ச்சு 21) பங்குனியேயாகும். இந்தப் பங்குனி, வரப்போகும் வசந்த காலமாகிய இளவேனிலை 'வருக!' என வரவேற்று நிற்பதாகும். காதல் வாழ்வில் மற்றெவரினும் மிக்கும் சிறந்தும் விளங்கிய தமிழ் மக்கள், அக்காதல் வாழ்வு சிறக்க வசந்தத்தை எதிர் நோக்கி நிற்பர். 'மாசில் வீணையும், மாலை மதியமும், வீசு தென்றலும், வீங்கு இளவேனிலும்' இயைந்த நிலையை எண்ணும் அவர்தம் உள்ளம். அந்த உள்ள உணர்வைத் தூண்டுவது இப்பங்குனியேயாகும். இப்பங்குனியைப் 'பங்குனிப் பருவம்' என்பர் திருத்தக்கதேவர்.

**'காசறு துறவின் மிக்க கடவுளர் சிந்தை போல**
**மாசறு விசும்பின் வெய்யோன் வடதிசை அயன முன்னி**
**ஆசற நடக்கும் நாளில் ஐங்கணைக் கிழவன் வைகிப்**
**பாசறை பரிவு தீர்க்கும் பங்குனிப் பருவம் செய்தான்.'** (*851*)

என்பது சிந்தாமணி. ஆம்! உருவிலியாகிய ஒரு பெருங் காமக் கடவுளாம் மன்மதன் மகிழ்ந்து விளையாடும் பருவம் பங்குனிப் பருவம். அந்தப் பருவம் வருமுன் வாடையிலும் பனியிலும் வருந்திய மக்கள் அப்பருவத்தை வரவேற்று மகிழ்வர். பின் பெருங் கோடையும் கார்காலமும் தொடருமுன் பங்குனி தொடங்கி இளவேனில் முடியவுள்ள வசந்த காலத்தே இன்புற்று அவர்கள் இன்னல் நீங்கி இனிது வாழ்வர்.

மேலும் கார்காலம் தொடங்கி வயலில் உழைத்த உழவன், பின்பனிக்காலம் முடியுமுன் அவ்வயற் பயனையெல்லாம் கைக்கொள்வான். அடுத்த கார் தொடங்குமுன் சிறிது ஓய்வு கிடைக்கும் அவனுக்கு. தமிழருள் பெரும்பாலார் உழவர்களே என்பது சொல்லவும் வேண்டுமோ! உழவர் விளைபயனைக் கொண்டு தாமும் மகிழ்வர்; சுற்றத்தாரையும் மகிழ்விப்பர். பெற்றது கொண்டு சுற்றம் அருத்தும் பெருஞ்செயல் உழவருடையது. அவர்கள் காதல் மனையாளுடன் இன்ப வாழ்வில் இருந்து தமக்கும் மற்றவருக்கும் பயன்படும் வகையில் விழாவாற்றிச் சிறப்பார்கள். அவ்விழாக்களின் தொடக்க நாள் உத்தர நாளாகும்.

தமிழர்கள் தெய்வ நம்பிக்கை உடையவர்கள்; தம் செயலையெல்லாம் கடவுள்மேல் ஏற்றிக் கண்டு களிக்கும் நல்லுளம் பெற்றவர்கள்; கடவுளும் நம் போல வாழ்கின்றான் என்று இலக்கியம் இயற்றி, அந்த நிலையிலே அவனை வழிபடுபவர்கள். அப்பாலுக்கப்பாலாய் இருக்கின்ற ஆண்டவனைத் தம் அருகிலே இருத்திக் காண அவர்கள் கையாண்ட வழி அது. எனவேதான் தாம் இளவேனிற்பரு

வத்தே பெறும் இன்பச் சிறப்பினை இறைவன் சார்பில் ஏற்றினர். இறைவன் இறைவியை மணம் செய்துகொள்ளும் சிறந்த நாளாக இப்பங்குனி உத்தர நாளை அமைத்தனர். இறைவன் தனிமை நீங்கிச் சத்தியொடு சேரின் உலகில் காதல் வாழ்க்கை நன்கு சிறக்கும் என்பதைக் கண்டார்கள் அவர்கள். காதல் வாழ்வு சிறக்க, சிவனும் சத்தியும் இயைந்து வாழ வேண்டும் என எண்ணினர். எனவேதான் உத்தரத் திருமண விழா உண்டாயிற்று. அந்த மணக் காட்சியே கயிலாயக் காட்சி.

கயிலைக் காட்சி கண்ட அடியவர் ஒருவர் அக் காட்சியைப் பலபடப் பாராட்டுவதைக் காண்கிறோம். அப்பர் கயிலை சென்று ஆண்டவனைக் கண்டிலர். அவர் கண்ட கயிலைக் காட்சி ஐயாற்றில் அமைந்தது. அக்காட்சியை அவர் விளக்கும்போது இந்தக் காதல் வாழ்வைத்தான் கூறுகின்றார். 'காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்', 'கோழி பெடையொடும் ஆடிக் குளிர்ந்து வருவன கண்டேன்', 'வரிக் குயில் பேடையொடு ஆடி வைகி வருவன கண்டேன்' என்பன அவர் வாக்கு. ஆம்! அவர் கண்ட கயிலைக் காட்சி அம்மை அப்பர் காட்சியேதான்.

சிவன் வேறு சத்தி வேறு அல்லர். இருவரும் ஒருவரேயாக இயைந்தவர்தாம். அதனாலேதான் ஒரே உடலில் பிரிக்க முடியாதபடி இறைவன் உரு அம்மையப்பராக அமைக்கப்பட்டுள்ளது. செப்புக் கம்பியும் மின்சார சத்தியும் போன்றவர் சிவனும் சத்தியும். சிவன் அனைத்திற்கும் அப்பாற்பட்டுத் தனியான மோன நிலையில் நிற்கும் போது அனைத்

தும் சலனமற்று நிற்கும். அவன் சத்தியோடு சேர்ந்து சிறக்கும்போது அனைத்தும் ஆரவாரித்து இன்பில் திளைக்கும். செப்புக் கம்பி தனித்து நிற்கும் போது செயல் இல்லை; ஆனால், அதனூடு மின்சாரம் செல்லும்போது உலகையே அழிக்கும் திறன் பெறுகிறது. அதே செயல்தான் சிவசத்தி நிலையும். சிவனும் சத்தியும் சேரும் இந்நிலையினைப் புராண வாயிலாகப் பௌராணிகர் நன்கு விளக்கியுள்ளார்கள். கந்த புராணமும் காஞ்சிப் புராணமும் இந் நிகழ்ச்சியைப் புராண முறையில் விளக்குகின்றன.

இறைவன் மோன நிலையினை மன்மதன் கலைக்க, அந்நிலையில் வந்த தேவர்களுக்கு, 'மங்கையை மணந்து நுந்தம் வருத்தம் நீக்குதும்' என்று வாக் களித்துப் பின் பார்வதியை மணக்க ஏற்பாடு செய்தான். இமயமலைத் தலைவனாகிய இமவான் தன் மகள் பார்வதியை மணக்குமாறு இறைவனை வேண்டி நின்றான்; பங்குனி உத்தரமே அம்மணத் திற்குச் சிறந்த நாள் எனக்கொண்டான்.

**'ஆதியின் உலக மெல்லாம் அளித்திடும் அன்னை தன்னைக்**
**காதலின் வதுவை செய்யக் கருதினை; கணித நூலோர்**
**ஓதுபங் குனியின் திங்கள் உத்தரம் இன்றே யாகும்**
**ஈதுநன் முகூர்த்தம் எந்தாய் இமயமேல் வருதி என்றான்'**

(கந்த. வரை. 35)

என்று கச்சியப்பர் பங்குனி உத்தரத்தைச் சிறப்பிக் கின்றார். இமவான் வேண்டுகோளின்படி இறைவன் அப்பங்குனி உத்தரநாளில் இமயமலைக்குச் சென்று பார்வதியை மணந்துகொள்ளுகிறான். அவன் மணம் செய்துகொண்டபின் உலகில் இருமை நீங்கி ஒருமை யுற்றது. துன்பம் அகன்று இன்பம் செழித்தது.